
வாழ்வில் நம்பிக்கையூட்டும் அம்பாள் வெளியீடுகள்

தேவி தரிசனம்

மயிலை உறை மகா சக்திகள்

(கோலவிழி அம்மன் - முண்டகக் கண்ணி அம்மன்)



பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

தேவி தரிசனம்

மயிலை உறை மகா சக்திகள்

(கோலவிழி அம்மன்—
முண்டகக்கண்ணி அம்மன்)

பொன். பாஸ்கர மார்த்தாண்டன்

அம்பாள் பதிப்பகம்
48, ராம நாயக்கன் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை-600034.

முதல் பதிப்பு, ஜூன் 1981

தாமரை மணாளன் தயாரிப்பு

அட்டையை அலங்கரிக்கும்
மயிலை, கோலவிழி அம்மன்,
முண்டகக்கண்ணி அம்மன் மூலஸ்தான வண்ணத்
திருவுருவங்களை வரைந்து உதவியவர் ஓவியர்
மணிவேல்.

விலை . ரூ- 3

இந்நூலில் இடம் பெற்றிருக்கும்
அம்பாள் செய்திகளை இதயம் பேசுகிறது இதழில்
தொடர்ந்து வெளியிட்டு உதவிய ஆசிரியர் மணியன்
அவர்களுக்கு என் நன்றி.

அச்சிட்டோர் : அன்னை அஞ்சுகம் அச்சகம்
இராயப்பேட்டை, சென்னை-600014.

தேவி சரணம்

அணில் ஓர் அற்பமான பிராணி.

ஆனாலும் அதன் செய்தாது எளிய பணியால் ஸ்ரீராம பிரானின் அரவணைப்புக்குள்ளாகி இராமாயணத்தில் பெருமை பெற்றது.

இது அணிலின் பெருமை அல்ல; அரவணைத்த அவதார நாயகனின் மகிமை. பகவானின் சேவையில் அணிலைப் போல் மிக அற்பமாக ஒரு துரும்பை அசைத்தாலும், 'அந்த அற்பப் பணியையும் மகத்தானதாக்கி மகிமை பெறச் செய்துவிடுவோர் பரமாத்மா'என்பது உலகுக்கு உணர்த்தப் பட்ட உண்மை.

அடியேன், அணிலிலும் அற்பமானவன். ஆம்; அணி லுக்கு உலகியல் காமக் குரோத மத மாச்சரியங்கள், பழி பாவங்கள் தெரியாது; ஆனால் நான்—சாமான்ய மனிதர் களுள் ஒருவனான நான்—சாமான்ய மாந்தரைப் போல்—மாபாதகங்களிலும் மானுடப் பலவீனங்களிலும் உழலும் நான்—அந்த ராஜ ராஜேஸ்வரியால் அரவணைக்கப் பட்டிருக் கிறேன் என்றால், அது அந்த தேவதேவியின் அலகிலா அருட் கருணையே; அந்த லோக தயாபரியின் சேவையில் என் வாழ் வில் சிறு காலக்கூறு அளவாயினும் நான் ஈடுபடும் பாக்கியம் அவள் அளித்த அருள் வாய்ப்பே!

'என்னைக் கருவியாகக் கொண்டா, இறைவி இந்தத் தன் அற்புதப் பணியை நிறைவேற்றுகிறாள்?' என்று அடிக்கடி மலைத்து நிற்கிறேன்; 'அந்த தயாபரியின் நாமம் முழங்க யான் ஏற்றுள்ள பணிக்கு நான் எந்த வகையில் தகுதியுள்ளவன்?' என்று என்னும்போது நான் கண்கலங்கி சோர்ந்து நிற்கிறேன். என்னை என் பலவீனங்களுடன் ஆட்

கொண்டு இந்த அறப்பணிக்கு என்னை ஆளாக்கிய அந்த அம்பிகையின் அருள் வீச்சில் மெய்சிலிர்த்து நிற்கிறேன்.

'இதயம் பேசுகிறது' பத்திரிகைத் தொடங்கும் சமயம் அதன் அமைப்பைப் பற்றித் திட்டமிடுவதற்கு அதன் ஆசிரியர் குழு, திரு. மணியன் அவர்கள் தலைமையில் கூடியிருந்தது. அப்போது சக்தி தலங்களுக்கெல்லாம் சென்று அம்பாளின் மகிமையை எழுத வேண்டும் என்று முடிவெடுக்கிறோம். அப்போது அந்தப் பணியை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று யோசித்தோம். வாரியாரை எழுதச் சொல்லலாமா? அல்லது இன்னும் வேறு எந்தச் சமயப் பெரியாரையாவது எழுதச் சொல்லலாமா'' என்று பலவாருகச் சிந்தித்தோம். அச்சமயம் திரு. மாயா, 'இந்தப் பொறுப்பை தாமரைமணாளனிடம் ஒப்படைக்கலாமே......!' என்றார். நான் ஒருகணம் அதிர்ந்து போனேன். ஆனால் திரு. மணியன் அவர்கள் முகம் பிரகாசமானது. ''இதையேதான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த எண்ணம் மற்றவர்களுக்கும் வருகிறதா என்று பார்க்கத்தான் நான் காத்திருந்தேன்'' என்றார் அவர் உற்சாகமாக. ஆனந்த விகடனில் மாவட்ட மலர்ப் பணியின்போது திருச்செந்தூர், மதுரை மீனாட்சி, ஸ்ரீரங்கம்ரங்கநாதப் பெருமான், திருத்தணி முருகன், திருவண்ணாமலை நாதர் ஆலயங்களை பற்றி நான் எழுதிய கட்டுரைகள்தாம் திரு. மணியன் அவர்களுக்கும், மாயா அவர்களுக்கும் அப்படியொரு முடிவுக்கு வரக் காரணமாக இருந்தன. நான் என் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுமுன்னரே எனக்கு நாமகரணம் சூட்டும் பணியில் தீவிரமாகி விட்டார் திரு. மணியன். அது மணியன் அவர்களின் இயல்பு. ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்றால், அதை நிறைவேற்றுவதில் அவர் காட்டும் தீவிரம் மின்னல் வேகமாக இருக்கும். பாஸ்கரன் என்ற என் இயற்பெயரும் —பொன்னுசாமி என்ற அடிப்பெயரும் இணைந்து பொன். பாஸ்கரன் ஆகியது. மார்த்தாண்டன் என் குடும்பப் பெயர்.

இந்த மகத்தான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டதும் நான் நேராக அம்பாளிடம் சென்று சாஷ்டாங்க

மாக நமஸ்கரித்து கண்ணீர் மல்க ஒரு வரம் கேட்டேன். ''அம்மா நான் மிகமிகச் சாமான்யன். உன் பெருமையை எழுதும் வலிமை எனக்கு இல்லே. இந்த மகத்தான பொறுப்பை நீ என்னிடம் ஒப்படைத்திருப்பது உன் எண்ணற்ற திருவிளையாடல்களில் ஒன்று. என்னேயும் கருவியாக கைக்கொள்ள நீ திருவுளம் கொண்ட மர்மத்தை நான் அறியேன். நீ திருவுளம் கொண்டபின் நம்ப முடியாதன நிகழும். அப்படி ஓர் அற்புதத்தை நிகழ்த்த சித்தம்கொண்டு விட்டால்...ஆனுல் நின் மகிமை கூறும் இப்பணியை என்னுல் மட்டுமே நிறைவேற்ற முடியாது. இந்தத் தேவி தரிசனம் கட்டுரைகளை எனக்காக நீயேதான் எழுதிக் கொள்ள வேண்டும்!'' என்று அவளிடம் சரணடைந்தேன்.

இந்த எளியேனுடைய கோரிக்கையை என் தாய் ஏற்றுக் கொண்டாள்.

அதனுல்தான் என் மூலம் அவள் நிகழ்த்தும் இந்த எழுத்துப் பணிக்கு ஒரு தனி வல்லமை உருவாகியிருக்கக் காண்கிறேன்.

'இதயம் பேசுகிறது' இதழில் தேவி தரிசனம் கட்டுரை வெளியான அம்பாள் திருத்தலங்களுக்கெல்லாம் பக்தர்களின் வருகை அதிகப்பட்டிருப்பதாக பல மெய்யன்பர்கள் என்னிடம் கூறியபோது நான் அம்பாளின் அருட்கருணையை வியந்து கண்ணீர்த் துதி செய்து நிற்கிறேன்.

மயிலே கோலவிழிஅம்மன் ஆலயத்திலும் இந்த எளியோனின் அணில் பணியை அம்பாள் சிறக்கச்செய்தாள் என்று நான் கண் கூடாகப் பார்க்கிறேன். அவள் திருப்பாதங்களில் வீழ்ந்து போற்றுகிறேன்...அனைத்திற்கும் அவளே மூல கர்த்தா...என் அன்னே ஆட்டுவித்தாள்...அகிலமே ஆடுகிறது. அடியேனும் ஆடினேன். அனைத்துமே அவள் மகிமை...

கோலவிழி அம்மன் திருத்தலத்தின் மகிமையை எழுதும் பெரும் பேறு எனக்குச் சித்தி பெற உதவிய பல

உன்னதப் பெரியோர்களுக்கு நான் நன்றியுடன் தலை வணங்குகிறேன். அருட்கருணைமிக்க குருஜி சுந்தரராமனி சுவாமிகள், சென்னை அற நிலைய ஆணையர் திரு. சுப்பிர மணியம், துணை ஆணையர் திரு, ஆர். அர்ஜுனன், ஆலய அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரி, சூபரிண்டெண்ட் மற்றும் அம்பாள் சேவையில் சிறந்த கபாலீஸ்வரர் ஆலய அலுவலர்கள் மற்றும் அனைவருடைய உதவியையும் ஆசியை யும் நன்றியோடு போற்றுகிறேன்.

அம்பாள் பேரில் அருட்பா எழுதித்தந்த திருமதி ஸௌந்தரா கைலாசம் அவர்களுக்கும் ஆலய வழிபாட்டு முறை பிரத்தியேகமாக அருளிச்செய்த கருணைமிக்க குருஜி அவர்களுக்கும் என் நன்றி.

கோலவிழி அம்மன், முண்டககண்ணி அம்மன் மூலஸ் தான வண்ண ஓவியங்களை வரைந்து தந்த ஓவியர் திரு. மணி வேல் அவர்களுக்கும் இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த அன்னை அஞ்சுகம் அச்சகத்தாருக்கும் நன்றி...

வாசக அன்பர்களே, அடியேனின் பணிக்கு உங்கள் அரிய ஆசியைக் கோருகிறேன்.

அன்பன்,
தாமரை மணாளன்
பொன். பாஸ்கர மார்த்தாண்டன்

மயிலாப்பூர் கோலவிழி அம்மன் தரிசனம்

1

அன்னையே கோல அருள்விழி போற்றி!
ஆனந்தக் கொடியே! அணிமொழி போற்றி!
இன்னல் தீர்க்கும் இறைவியே போற்றி!
ஈந்தருள் சுரப்பாய் ஈஸ்வரி போற்றி!
உலகுய்ய வந்த உத்தமி போற்றி!
ஊரெல்லை காக்கும் உயர்வே போற்றி!
என்புடை மாந்தர்தம் அன்பே போற்றி!
ஏழிசைப் பண்ணே, எண்ணே போற்றி!

—அருள்மிகு கோலவிழியம்மன் என்னும் பத்ர காளி அம்மன் போற்றி இசைமாலை.

இது சென்னை நகரமா? அல்லது அன்னை நகரமா?

—என்று பரவசப் பெருக்குடன் வியந்து நிற்கிறோம். அந்த அளவு இன்று அன்னை பராசக்தி அற்புதத் திருவிளையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள் சென்னை நகர்ப் புறத்தில்.

அன்று, மதுரையில் மீனாட்சியாய் அமர்ந்து கோனாட்சி புரிந்து மகிமைப்படுத்திய லோகமாதா, இன்று தன் அருளாட்சியை இப்பெருநகரமும் உணரவும்—உணர்ந்து, உய்ந்து சிறக்க பிரத்யட்சமாகக் காட்சி தருகிறாளா?

அவள் எழுந்தருளியிருக்கும் தலமெங்கும் புதிய புதிய ஜோதி! பேசும் தெய்வமாய் பிணியகற்றும் மாமருந்தாய், அவள் மாந்தரோடு கலந்து அவர்களின் அருள் அன்னையாய் நின்று, நேற்றும் இன்றும் நிகழ்த்தி வரும் அற்புதங்கள் அம்மம்மா...!

மயிலையில் கற்பகமாய் முண்டகக்கண்ணியம்மனாய், மாங்காட்டில் காமாட்சியாய், திருவேற்காட்டில் கருமாரியாய், மேலூரில் திருவுடை நாயகியாய், திருவொற்றியூரில் வடிவுடை நாயகியாய், மாம்பலத்தில் முப்பாத்தம்மனாய், நுங்கையில் கற்கோடியம்மனாய்—அங்காளம்மனாய், வட சென்னையில் கன்னிகா பரமேஸ்வரியாய்—காளிமாதேவியாய், இன்னும் எண்ணற்றத் திருநாமங்கள் ஏற்று பேட்டையெங்கும் அன்னை ஆட்சி செய்யும் திருநகரில்—

சங்கரன் கோயில் கோமதியம்பாளின் அம்சமாகப் பெரம்பூர் முருகேச நகரிலும் இன்று புதிதாய்த் திருக்கோயில் கொண்டருளும் கோலாகலத்தோடு—

மயிலாப்பூரில் வங்கக் கடலோரம் சிங்க வாகனமேறி—கோலவிழி கண்ட பத்ரகாளியாய் அன்னை கோலோச்சும் அருள் வீச்சு மிக உச்சிதமாகச் சுடர் விடக்கண்டு மெய் சிலிர்த்துத் தொழுது நிற்கிறோம்.

கடலலைகள் ஆர்ப்பரிக்கும் அந்த மயிலாப்பூர் பகுதியில் அன்னையின் கருணைக்கடலலைகள் ஆரவாரித்து அருளாவேசம் கொண்டு, அனைத்துக்கோடி மக்களையும் அரவணைத்து நிற்கும் திருக்கோலம் என்னே! என்னே!

அங்கே—அகில இந்திய வானொலி நிலையம் (மயிலாப்பூர்) அமைந்திருக்கும் பகுதி அருகே கோபதி நாயாரணசாமி செட்டி சாலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அந்தக் கோல விழியம்மன் என்னும் பத்திரகாளியம்மன்தான், இன்று காலங்களை வென்று புதிய வேகத்துடன் புவனம் புரந்தருள அருள் வழங்கத் திருச்சூலம் ஏந்தியிருக்கிறாள்.

மயிலாப்பூர் கிராம தேவியாய் இன்றும் கற்பகாம்பாள் ஆலய உற்சவத்தைத் தொடங்கி வைக்கும் மூல நாயகியாய் எல்லை காத்து நிற்கும் அந்த பத்திரகாளியின் ஆலயம்தான் சென்னையிலேயே மிகப் பழமையானதும், மகத்தான

வல்லமை பூண்டதுமான சக்தி திருத்தலம் என்கின்றனர் ஆன்றோர்.

'அந்தத் தலத்தில்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் வழிபட்டு அன்னையின் அருள் பெற்றார் என்று ஓலைச் சுவடி குறிப்புகளில் இருந்து கண்டறிந்து இருப்பதாக' திருவேற்காடு கருமாரி ராமதாசர் சுவாமி கூறுகின்றார்.

பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாகரிகத்தை அம்பாளின் உற்சவ விக்ரகம் கொண்டிருப்பதாக தொல் பொருள் ஆய்வாளர் கூறுகிறார்.

நேற்றைய பெருமைகளை மிஞ்சும் வண்ணம் இன்று அவள் ஜீவத் துடிப்புடன் நிகழ்த்தும் வல்லமை பொருந்திய மகிமைகள் எத்தனை, எத்தனை!

ஃ ஃ ஃ

திருநெல்வேலிப் பகுதியிலிருந்து ரயிலில் சென்னை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்தார் ஒரு பெண்மணி. அவர் பெயர், திருமதி பட்டுமதி நடராஜன். ரயிலில் ஓர் அதிர்ச்சிகரமான இழப்பு அவருக்கு. அவர் கையிலிருந்த ஒரு வயதுக் குழந்தை ரயில் பயணத்தின்போது இறந்து விட்டது. அந்த சோகத்துடன் சென்னை வந்தார். அதைத் தொடர்ந்து குழந்தை பிறக்கவில்லை. அப்போதுதான் கோல விழியம்மன் என்னும் பெயர்பெற்ற பத்திரகாளியம்மனின் அருளைப் பற்றி அக்கம்பக்கத்தார் அவரிடம் கூறினார்கள். அப்போது அம்மனின் பழைமையான ஆலயம், சிதில மடைந்து பூஜைகளும் ஒழுங்காக நிறைவேறாமல் பராமரிப் பற்ற நிலையில் இருந்தது. இருப்பினும் பக்தியும் நம்பிக்கை யும் குறையாமல் திருமதி பட்டுமதி, அம்பாளை நம்பிக்கை யோடு தொழுது நின்றார். திடீரென்று ஒரு செவ்வாய்க் கிழமை அம்பாளின் அருள்மீது அவருக்கு அவநம்பிக்கை வந்துவிட்டதோ என்னவோ, மனச் சோர்வுடன் கோயி லுக்குப் போகாமல் வீட்டிலேயே படுத்துவிட்டார். ஆனால்

தன்னைத் தேடி வராத மகளைத் தேடி அம்பாளே சென்றாள்! அவள் அருளால் அன்றிலிருந்து அப்பெண்மணி கருவுற்றார். இப்போது இந்த அம்பாளின் திருப்பாதங்களே தன் செல்வமாகக் கருதி அவள் நாமத்தை வழிபட்டு வருகிறார்.

காரணீஸ்வரர் கோயில் தெருவைச் சேர்ந்த ஆர். எம். தெய்வானை ஆச்சிக்கு திடீரென்று ஒரு பிரச்சினை. ஒரு பண நெருக்கடி காரணமாக தான் குடியிருந்த வீட்டையே விற்க வேண்டிய நிலை. அம்பாளிடம் வந்து தன் மனக் குறையைச் சொல்லி முறையிட்டார். மறுவாரமே அவருடைய பிரச்சினை முற்றிலும் எதிர்பாராத முறையில் தீர்ந்தது. 'அம்மா என் வீட்டை நிலைக்க வைச்சுட்டா' என்று கைதொழுகிறார் அப் பெண்மணி.

பீமண்ண முதலித் தெருவில் இருக்கும் திரு. பி. குமாரசாமியின் மனைவிக்கு ஒரு வருட காலமாக உடல் நலம் குன்றியிருக்கிறது. பக்கவாதம். எத்தனையோ வைத்தியம் செய்துபார்த்தும் குணமாகவில்லை. பின் சில வாரங்களாக அம்பாளைத் தரிசித்துச் சென்றார். 'பாதிக்கு மேல் நிம்மதி தெரிகிறது. அம்மா முழுவதையும் குணமாக்கிவிடுவாள்' என்று நம்பிக்கையோடு கூறுகிறார் திரு. குமாரசாமி.

தண்ணீர்த்துறை மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்யும் வேதகிரி சொல்கிறார்: 'எனக்கு வேறு எந்த இடத்திலும் நிம்மதியில்லை. அம்பாளின் சந்நிதியில் வந்து உட்கார்ந்தால்தான் நிம்மதி. தாய்கிட்டே குழந்தை வந்து ஆறுதல் அடைகிறமாதிரி நான் இந்த பத்திரகாளி அம்மாவிடம் ஆறுதலடைகிறேன்."

சையத் அகமது உசேன் தெரு 16-ம் எண் வீட்டிலிருக்கும் திருமதி வேணுகோபால் கணவனை இழந்த கைம் பெண். அவருக்குச் சேரவேண்டிய பெருந்தொகையை பங்காளிகள் கணவன் உயிருடன் இருந்த காலத்திலேயே கொடுக்க மறுத்து விவகாரம் செய்து கொண்டிருந்தார்களாம். கணவனை இழந்ததும் கைசோர்ந்த நிலையில் கலங்கியவாறு அம்பாளிடம் வந்து முறைவிட்டாராம், ஓர் அற்புதம்

போல்—அத்தனை காலமும் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் அவர்பால் அனுதாபம் காட்டி உரிய பணத்தை தாமே வலிய அழைத்துக் கொடுத்துவிட்டார்களாம்!

கோயிலுக்கு அருகே குடியிருக்கும் லட்சுமிக்கு கல்யாணமான புதிதில் ஏதோ குடும்பப் பிரச்சினை காரணமாக மனச் சங்கடமாம். கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றாராம். அப்போது திடீரென்று ஒரு சிறுமி கலகலப்பான சிரிப்போடு அங்கு தோன்றி; அவரைத் தற்கொலை செய்யவிடாமல் தடுத்துவிட்டாளாம். அன்றிலிருந்து சர்வசாதா காலமும் அம்பாளையே நினைத்துக்கொண்டிருப்பாராம். அக்கம்பக்கத்தார்கூட அவரை 'அம்பாள் பைத்தியம்' என்று கேலி செய்வார்களாம். அவருக்கு ஏழு வருஷமாக குழந்தையில்லாத சோதனை ஏற்பட்டதாம். அம்பாளிடம் உருகி வேண்டி, குழந்தை பிறந்தால் அம்பாளின் பெயரை வைப்பதாகப் பிரார்த்தித்தாராம். அதன்படியே அவருக்குக் குழந்தை பாக்கியம் கிட்டியது. ஆனால், குழந்தை பிறந்து பத்து நிமிஷம் வரை அழவில்லையாம். 'காளியம்மா' என்று அம்பாளின் பெயரைச் சொல்லி அழைத்ததும்தான் அழுததாம்.

அம்பாள் சந்நிதியில் நிற்கும் ஒவ்வொருவரும் தம் குடும்ப வாழ்வில் அம்பாள் நிகழ்த்திய அற்புதங்களைச் சொல்லிச் சொல்லிப் போற்றிக் கரம் குவிக்கின்றனர்.

ஆலயத்தில் ஒருபுறத்தில் அன்னதானம் செய்ய ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. ஏற்பாடு செய்து கொண்டிருந்தவர் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சத்தியா நாயுடு. அவர் திடீரென்று அம்பாள் பெயரால் அன்னதான ஏற்பாடு செய்வதற்கான காரணத்தை விவரித்தபோது வியப்பால் திகைத்து நிற்கிறோம்...

2

நல்லதை நாட்டிடும் நாயகி போற்றி!
அல்லதைக் களைந்திடும் ஆற்றலே போற்றி!
மயிலைப் பதியின் மகிமையே போற்றி!
கயிலை நாதனின் களிப்பே போற்றி!
பத்திர காளியே பரையே போற்றி!
சத்திய வடிவே சங்கரி போற்றி!
சூலினி வராகி சுந்தரி, போற்றி!
மாலினி பயிரவி மாமணி போற்றி!

—அருள்மிகு 'கோலவிழி அம்மன்' என்னும் பத்திரகாளியம்மன் போற்றி இசை மாலை.

தெய்வம் இப்படியும் நின்று பேசுமா? வியப்பால் கட்டுண்டு நிற்கிறேன். அன்னை பத்திரகாளியின் சந்நிதியில்,

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த திரு. சத்தியா நாயுடுவின் வாழ்வில் அந்தக்கோலவிழி நாயகியான அன்னை பத்திரகாளி நிகழ்த்திய அற்புதம் அப்படி ஓர் அபூர்வமாக அமைந்திருக்கிறது!

திரு. சத்தியா நாயுடுவுக்கு இரண்டு மனைவிகள். அவரைப் பொறுத்தளவில், இரண்டு பேருமே அவருடைய சமமான அன்புக்குரியவர்களாக இருந்தார்கள். ஒரு மனைவி பொருளாதார ரீதியாக நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் சத்தியா நாயுடுவின் வாழ்வில் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படா வண்ணம் உபயோகமாக இருபப்வர் அவர்தான். இன்னொரு மனைவி அவ்வளவு பணக்காரப் பெண்ணில்லை. ஆனாலும் தன் ஈடற்ற அன்பாலும் பண்பாலும் திரு. நாயுடுவின் மனதில் இடம் பெற்றவர். இருவரையுமே சம அளவில் அவர் நேசித்து வந்தாலும், அந்த இரண்டு பெண்களுக்குமே அவருடைய அன்பு தமக்கே முழுமையாக இருக்க வேண்டுமென்று ஒரு வேகம். அதனால் ஒவ்வொருவரும். அவர் அடுத்த மனைவியிடமிருந்து நீங்கித்

தம்முடன் மட்டுமே வாழவேண்டுமென்று, கணவனை வற்புத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

திரு. நாயுடுவோ இரண்டு பேர்களையும் சமாதானப் படுத்தி ஒரே குடும்பமாக வாழவைக்க வேண்டுமென்று விரும்பினார்! ஒருவருக்காக இன்னொருவரை அவர் இழக்க விரும்பவில்லை.

இந்நிலையில் பிரச்சினை வேறு மாதிரி திரும்பிவிட்டது. இரு மனைவியருமே அவர் பேரில் கோபம் கொண்டு, தனித் தனியாக விவாகரத்து வழக்குகளைத் தொடர்ந்து விட்டார்கள். ஆக ஒரே நேரத்தில் கைப்பிடித்த இரண்டு பெண்களோடு வாழவிரும்பிய சத்தியா நாயுடுவை விட்டு ஒரே நேரத்தில் இரண்டு பெண்களுமே விலகக்கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது. நாயுடு எவ்வளவோ சமாதான முயற்சியில் ஈடுபட்டுப் பார்த்தும் ஒரு பயனும் இல்லை.

விவாகரத்து வழக்கை நடத்தித் தங்கள் கணவரிடமிருந்து பிரிந்து கொள்வது என்ற உறுதிப்பாட்டுடன் மனைவியர் இருவரும் தாம் தாம் தொடர்ந்த வழக்குகளைத் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்தனர். இன்னும் இரண்டொரு வாய்தாக்குள் வழக்கு முடிவாகிவிடும் என்ற சட்டத்துக்கு விஷயம் வந்துவிட்டது. இரண்டு பெண்களுமே அவரை விட்டுவிலகி விடுவார்கள் என்ற சூழ்நிலை உறுதியாகிக் கொண்டிருந்தது.

இதனால் மனம் நொந்த திரு. சத்தியா நாயுடு சென்னைக்கு வந்தார். அவருக்குப் பூர்வீகம் தமிழ்நாடுதான்.

சென்னைக்கு வந்ததும் அவருக்கு வழிகாட்டியும், தெய்வீக ஆலோசகருமாகத் திகழும் குருஜி சுந்தரராம சுவாமிகளைச் சந்தித்துத் தன் மனக்குறையைக் கூறினார்.

குருஜி சுந்தரராம சுவாமிகள், வள்ளிமலை ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சுவாமிகளின் சீடர். பல தெய்வீக நற்பணிகளுக்கு ஆதர்ச சக்தியாகவும், வழிகாட்டும் குருவாகவும்

திகழ்பவர். பல தெய்வத் திருப்பணிகளை தம் செல்வாக்கால் நடத்தி வைத்திருப்பவர். தம் அருள் சக்தியாலும், பக்தியாலும் சித்தி வரப்பிரசாதத்தாலும் பலருடைய மனக் குறைகளையும் பிணிகளையும் போக்கி உதவி வருபவர்.

அவர்பால் நீங்கா பக்தியும் பற்றும் கொண்ட அன்பர்களுள் நாயுடுவும் ஒருவர்.

நாயுடுவின் மனக்குறையைக் கேட்ட குருஜி, அவரைக் கோலவிழிநாயகியாம் அன்னை பத்திரகாளியின் ஆலயத்தைத் தொழுது தன் மனக்குறையைத் தாயிடம் சொல்லுமாறு பணித்தார். 'அன்னை பத்திரகாளியால்தான் இந்த வேதனையை நீக்க முடியும்' என்று அவர் வழிகாட்டியதன்படி திரு. சத்தியா நாயுடு அம்பாளைப் பிரார்த்தித்தார்.

அதன் பலனாக ஒரே வாரத்தில் அந்த அற்புதம் நடந்தது.

தென்னாப்பிரிக்காவிலுள்ள திரு. நாயுடுவின் வக்கீல் கேபிள் மூலம் அந்த வியப்பூட்டும் செய்தியை சென்னையிலிருந்த நாயுடுவுக்குத் தெரிவித்தார். அவருடைய இரண்டு மனைவியருமே ஏககாலத்தில் வழக்குகளை வாபஸ் வாங்கி விட்டார்களாம்! இருவரும் ஒருவருக்கொருவர் சமாதானமாகி, கணவருடன் சேர்ந்து வாழவும் கூட சம்மதம் தெரிவித்து, கணவரின் வக்கீலுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்களாம்!

தன்னுடைய நெடுங்காலப் பிரச்சினையை அம்பாள் இப்படி வியப்பூட்டும் வண்ணம் தீர்த்து அருள் புரிந்ததைக் கண்டு மெய்சிலிர்த்த திரு. நாயுடு அம்பாளின் ஆலயத்துக்கு ஓடோடிச்சென்று கண்ணீர் மல்க அவளை வழிபட்டார். பின் அன்னையின் ஆலயப்பணிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று விரும்பினாராம். அப்போது குருஜி, "அன்னதானத்தை விட அம்பாளுக்குப் பிரீதியானது வேறு எதுவுமில்லை. அதைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டாராம். இந்தச் சம்பவம்

சமீபத்தில்தான் அன்னையின் அருளால் நிகழ்த்திருக்கிறது.

குருஜி சுந்தரராம சுவாமிகளைச் சந்தித்து இதைப்பற்றி நான் விசாரித்தபோது, இதைப்போல் எண்ணற்ற அற்புதங்களை அன்னை கோலவிழியம்மன் இத்தலத்தில் நிகழ்த்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

இன்று, மயிலை கபாலீசுவரர் ஆலய நிர்வாகக் குழுவினர் பொறுப்பில் அம்பாளின் ஆலயத் திருப்பணி மகாகும்பாபிஷேகம் நிறைவேறுகிறது.

ஆனால், இதற்கு முன்பு சுமார் முயபது நாற்பது வருடங்களாக இவ்வாலயம் சிதிலமடைந்து பராமரிப்பற்றுத்தான் இருந்ததாம்!

அந்தப் புனருத்தாரணப் பணியையுமே அம்பாள் ஓர் அற்புதமாக நிகழ்த்திய செய்தியை, இந்து மத அறநிலையத் துறை ஆணையாளரின் நேர்முக உதவியாளரான திரு. ஆர் அர்ஜுனன் கூறினர்.

திரு. அர்ஜுனன் இயல்பாகவே சக்தி வழிபாட்டில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவரிடம் பாலகிருஷ்ணன் என்ற அன்பர், ''மயிலையில் ஒரு சக்திவாய்ந்த காளிகோயில் இருக்கிறது. அதன் பெருமை காலத்தால் மறைக்கப் பட்டிருக்கிறது. ஒருமுறை அதை வந்து தரிசியுங்கள்'' என்று வேண்டிக் கொண்டாராம்.

அதன்படி திரு. அர்ஜுனன் அந்த அம்பாளின் ஆலயத்திற்குச் சென்று தரிசித்தாராம். அப்போது ஆலயம் மிகவும் இடிபாடுற்ற நிலையில் தீபமேற்றக்கூட ஆளின்றி இருந்தாம். உடனே திரு. அர்ஜுனன் தாமே முன்வந்து தீபமேற்றி, பூஜை நடத்தச் செய்து அம்பாளைத் தரிசித்து விட்டுத் தன் இல்லத்துக்குத் திரும்பினராம்.

அன்றிரவு ஏதோ ஒரு சக்தி வசப்பட்டவர் போல் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தா

ராம் அவர். திடீரென்று இலேசாக அவர் கண் துயில கனவில் மயிர்க்கூச்செரியும் கனவு ஒன்று தோன்றியதாம் அவருக்கு.

ஆஜானுபாகுவான நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் அவர் கனவில் பிரத்தியட்சமாகத் தோன்றி, "நீ வந்து பூஜை செய்துவிட்டுப்போனுயே, அப்போது என் காலை வெட்டியிருப்பதைப் பார்க்கவில்லையா? இதோ பார், இந்த இடத்திலிருந்து என் காலை வெட்டியிருக்கிறுர்கள்!" என்று தன் இடதுகாலைக் காட்டினுராம். அந்தக் காலில் பெரும் பகுதி துண்டிக்கப்பட்டிருந்ததாம்.

திடுக்கிட்டுக் கண் விழித்த திரு. அர்ஜுனன், மறுநாள் காலையிலேயே அம்பாளின் ஆலயத்துக்குச் சென்று பார்த்த போதுதான் கனவில் அம்மா எந்த இடத்தைக் காட்டினுளோ அதே இடத்திலிருந்து அம்பாள் சிலையிலும் கால் துண்டிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. உடனடியாக அவர் திருவேற்காடு கருமாரி ராமதாசருக்குத் தெரிவித்து, அவர் மூலம் பக்தி சிரத்தையுடன் அம்பாளின் காலைச் செப்பனிட்டு அமைக்க ஏற்பாடு செய்தாராம்.

அன்றுமுதல் அம்பாள் ஆலயம் மீண்டும் புது மகிமை பெற்று மக்கள் மத்தியில் பிரபலமாகத் தொடங்கியது.

இதுவரை அம்பாளின் திருப்பணிக்காக யாரிடமும் சென்று நிதியுதவி செய்ய ஆலய நிர்வாகத்தினர் கேட்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லையாம் பக்தர்களுடைய வாழ்வில் பல அற்புதங்களை நடத்தி அவர்களைத் தன்னை நாடி வரச்செய்து, அம்பாளே அந்தத் திருப்பணியை நடத்திக் கொண்டிருக்கிறுராம். யாருடைய தூண்டுதலும் இல்லாமல் எண்ணற்ற அன்பர்கள் தாமாகவே ஆயிரக்கணக்கான தொகைகளையும் தங்க ஆபரணங்களையும் அம்பாளுக்கு அளித்து மகிழ்கின்றனராம்.

இவ்வாறு ஜாஜ்வல்யமாகச் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பத்திர காளியம்மன் தல மகிமையைப் பற்றிய ஓர் அபூர்வச் சிறப்பை விளக்கினுர் குருஜி. அது.........

3

கதிரவன் தொழுதிடும் காரணி போற்றி!
விதியினை மாற்றிடும் வித்தகி போற்றி!
மூல மந்திர முதல்வியே போற்றி!
கோல மொழியருள் கொற்றவை போற்றி!
அண்டமும் பிண்டமும் அமர்ந்தாய் போற்றி!
எண்டிசை ஏத்திடும் எந்தாய் போற்றி!
அடியவர் மனத்தினில் ஆள்வாய் போற்றி!
கொடியன வீழ்த்திக் குளிர்வாய் போற்றி!

—கோலவிழி அம்மன் (என்னும் பத்திரகாளி அம்பாள்) போற்றி இசைமாலை.

பாவிகளை சம்ஹரிப்பவள் பத்ரகாளி.

ஆனுல், இத்தலத்தில் என் அம்மை பத்ரகாளி பாவங்களை மட்டும் சம்ஹரித்துப் 'பாவிகளைக் கடைத்தேற்ற சூல மேந்தி, சுடர்முகம் காட்டி நிற்கிருள்.........

பாவங்கள் புண்ணியமாகிப் பகைமைகள் நீங்கி,காரிருள் ஒளியில் சங்கமித்து, எவ்விடத்தில் அபேதம் சம்பூர்ணமாக நிலைத்து நிற்கிறதோ அதுதான் தெய்வ சந்நிதானம் அந்தப் புனித சந்நிதியில் இறையருள் துலங்கி வெளிப்பட்டால் அதுவே மானிடர்க்கு நற்கதி.

ஆதிசங்கர பகவத்பாதாள் சிருங்கேரி பீடத்தை நிறுவும் போது அந்த அற்புதம்தான் நிகழ்ந்ததாம். பகைவர்களான பாம்பும் தேரையும் ஓரிடத்தில் நீரருந்திய காட்சியைக் கண்ணுற்றே அவ்விடத்தில் சாரதா பீடத்தை ஸ்தாபித்தாம், ஆதிசங்கரர்.

அந்த அற்புதம் மயிலையில் கோலவிழி நாயகியாம் அன்னை பத்ரகாளி அம்மன் திருத்தலத்திலும் நிகழ்ந்திருக்கிறது! அதை குருஜி சுந்தரராமன் விவரித்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்வரை இப்பத்திரகாளி அம்மன் ஆலயம் பராமரிப்பு இன்றி, இடிபாடுற்று, சுற்றுசுவர் இல்லாமல் கிடந்தது. வீணாகப்பொழுது போக்குவோரும், சமூக விரோதக் காரியங்களில் ஈடுபடுவோரும் ஆலய முன்புறத்திலிருந்து கொண்டு, பக்தர்களை அங்கு வரவிடாது தடையாக இருந்தனர். பெண்கள் அந்தப்பக்கம் நெருங்க முடியாத நிலை நல்லோராலும் தட்டிக் கேட்க முடியவில்லை. யார் நியாயம் கேட்டாலும், அவர்களைத் துன்புறுத்தினர்.........

இது நடந்து கொண்டிருந்தது. மகிஷாசுரனை வதைத்து தர்ம பரிபாலனம் செய்த பத்திரகாளையம்மன் சந்நிதியில்!

அன்னையின் அருளால் மீண்டும் துஷ்ட நிக்ரஹம் சம்பவிப்பதை அப்பகுதியிலுள்ள ஆன்றோரும் சான்றோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் இரவு பூஜைக்குக் குந்தகமாகவும், வரும் பக்தர்களுக்கு இடையூறாகவும் ஆலயத்தருகிலேயே சிலர் கூடி, சட்டத்துக்கும் சமூக நெறிகளுக்கும் புறம்பான காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அச்செய்தியை சிலர் குருஜி சுந்தரராமன் அவர்களிடம் வந்து தெரிவித்தனர். அவர் பல அன்பர்களின் ஒத்துழைப்புடன் ஆலயப் புனருத்தாரண முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரம் அது. இந்தப் புதிய முயற்சிக்குத் தடையாக சமூக விரோதிகளின் செயல்கள் அமைந்ததை நினைத்து வேதனைப்பட்டு இரவு முழுவதும் அம்பாளிடம் பிரார்த்தனை செய்தாராம்.

மறுநாள் காலையில் - அச்சமூக விரோதிகள் மதுவருந்தி ஆலயத்தின் முன் ஆர்ப்பாட்டத்துடன் ரகளையுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போது—அங்கே அவர்களை நிலைகுலையச் செய்த ஓர் அபூர்வக் காட்சி தென்பட்டது.

ஆம்; அவர்கள் அருகருகேபாம்பும்தேரையும் அருகருகே தோன்றின. பாம்பு படமெடுத்து நின்றது - தேரை அதன ருகே அச்சமின்றி அமர்ந்திருந்தது!

பாம்பும் தேரையும் கூடி நிற்கும் பகைமை நீங்கிய அந்தப் புனிதச் சாந்நித்தியத்தில் தான் அமர்ந்திருப்பதை அன்னை பத்ரகாளி அப்படி கூறுமல் கூறினளோ!

பாமர மக்களுக்கு அச்சமூட்டி அவர்களை நெறிப்படுத்த அந்தப் பாம்புருவில் தோன்றினளோ!

இந்த அச்சுறுத்தும் காட்சியின் தெய்வீக ரகசியத்தை ஊகிக்க முடியாமல், அலறி அடித்துக் கொண்டு அத்தனை பேரும் அங்கிருந்து ஓடினர். அதன்பிறகு அந்தப் பக்கம் அப்படி சமூக விரோதக் கும்பல் கூடியதுமில்லை. சட்டப் புறம்பான செயல்கள் எதுவும் நடைபெறுவதுமில்லை.

அதுமட்டுமல்ல; ஆலயத்தையொட்டியிருந்த பகுதியில் குடிசை போட்டுக் கொண்டிருந்தவர்களும் ஒருவர்பின் ஒருவ ராகக் காலி செய்து விட்டனர். அதன்பிறகே ஆலயச் சுற்று சுவர் கட்டுதல், பழுதுபட்ட அம்பாளின் திருக்கோயிலுக்குப் புனருத்தாரணப் பணிகள் செய்து கோபுரம் கட்டுதல் போன்ற பணிகளைத் தொடங்க முடிந்ததாம்!

இன்று எண்ணற்ற பக்தர்கள் உற்சாகமாக—யாருடைய தூண்டுதலுமின்றி தாமே முன்வந்து செய்யும் தெய்வத் திருப்பணிகளால் புனருத்தாரணம் பெற்றுவரும் அம்பாளின் ஆலயத்தைப் பரவசப் பெருக்குடன் நோக்கிக்கொண்டிருந்த காளிமைந்தன், "என் அம்மா சொன்னதை நிறைவேற்றி விட்டாள்!'' என்று ஆனந்த மேலீட்டால் குரல் தழுதழுக்க ஒரு தகவலைக் கூறினர்.

1948-ம் ஆண்டிலிருந்து இந்தப் பத்ரகாளி அம்மாள் மீது பக்தி பூண்டு அம்பாளின் ஆலயம் புதுப்பிக்கப் படாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தவராம் திரு. காளிமைந்தன்.

1976-ம் ஆண்டில் ஒருநாள்...சிதிலமடைந்திருந்த ஆலயத்தின் முன்புறக் கதவின் துவாரத்தின் வழியே

அம்பாளை தரிசிக்க முயன்றார். கருவறையில் விளக்கு இல்லை. அதனால் மனக்குமுறலை அடக்க முடியாதவராய், அம்பாளை நோக்கி, ''இத்தனை வருடமாக உன் ஆலயம் பாழ்பட்டுக் கிடக்கிறதே! இதைப் புதுப்பித்துக் கொள்ள உனக்கு சக்தி இல்லையா?'' என்று ஏசினாராம். அப்போது அவர் கண்களில் நீர் பொங்கியது. அதைத் துடைத்து விட்டு அம்பாளைப் பார்க்கும்போது, தீபமேற்றப்படாத அந்த கருவறையில் ஏதோ திடீரென்று தீபச் சுடர் தென்படுவது போலிருந்த தாம். அதைக் கண்டு திகைத்த காளிமைந்தன், 'இது நம் பிரமையாக இருக்கலாமோ!' என்று நினைத்துக் கொண்டே தன் வீட்டுக்குச் சென்றாராம்.

இரவில் கனவில் அம்பாள் மாற்றுருவில் தோன்றி, ''நீ உன் முயற்சியில் எனக்கு காப்பு சாத்து. நான் கோயிலைக் கட்டுகிறேன்!'' என்றாளாம்.

அதுகேட்டு மனம் பூரித்த காளிமைந்தன். அம்பாளுக்கு மஞ்சள் காப்பு சாத்த ஒரு செவ்வாய்க்கிழமையில் வந்தா ராம். அப்போது சில துஷ்டர்கள் ஏற்படுத்திய தடையால் அந்த முயற்சி தடைப்பட்டதாம்...இருந்தும் பிடிவாதமாக வேறு ஒரு நாள் வந்து அம்பாளுக்கு மஞ்சள் கர்ப்பு சாத்தி வழிபட்டாராம்...

இன்று...தன் வாக்குப்படியே அம்பாளே தன் ஆலயத் தைக் கட்டுகிறாள்! ஆம்; ...இந்த ஆலயத்திருப்பணிக்கென்று யாரிடமும் நாங்கள் பணம் கேட்கவேயில்லை. ஆனால் யார் யாரோ வந்து ஒவ்வொரு பணியாய் மேற்கொள்கிறார்கள். விசாரிக்கும்போது அம்பாள் அவர்கள் ஒவ்வொருவர் வாழ் விலும் ஒரு மலர்ச்சிகரமான அற்புதத்தை நிகழ்த்தியிருப் பதைச் சொல்கிறார்கள்...அப்படித் தொழுவாரின் பிரார்த் தனையை நிறைவேற்றி, அவர்களைத் தாமாக மனமுவந்து காணிக்கை செலுத்தச் செய்து தன் ஆலயத்தையும் அதன் மகத்துவத்தையும் புதுப்பித்துக் கொண்டிருக்கிறாள்!'' என்கிறார்கள்—இந்த ஆலயத்துக்கு நிர்வாகப் பொறுப்பி லிருக்கும் மயிலை கபாலீஸ்வரர் ஆலய நிர்வாக அதிகாரியான

திரு. பி. ராமதுரையும் அறங்காவலர் - குழுத் தலைவரான திரு. எம். டி. குப்புசாமி முதலியாரும், அம்பாள் திருப்பணி யில் அளவற்ற ஈடுபாடு கொண்ட பக்தஜனசபா செயலா ரான வி. எஸ். பாலகிருஷ்ணனும்.

அம்பாள் மக்கள் மத்தியில் நடத்தும் அற்புதங்களில் தான் எத்தனை வகை!

''கணவர் ஒரு வருஷமாக வேலைக்குப் போகவில்லையே... ஏதாவது வழிகாட்டு அம்மா!'' என்று அம்பாள் முன்குறைப் பட்டுத் தொழுது நின்றாராம். கபாலீஸ்வரர் கோயில் தெருவிலிருக்கும் ராணி. (கணவர் பெயர் எஸ். கோதண்டம் இன்று குறை நீங்கி, 'அம்பாளை வேண்டிக் கொண்டதி லிருந்து கடந்த மூன்று மாதமாகத் தொடர்ந்து என் வீட்டுக் காரருக்கு வேலை (தச்சுத் தொழில்) கிடைக்கிறது. குடும்பம் நிம்மதியாக இருக்கிறது' என்று அம்பாள் சந்நிதியில் தொழுது போற்றிக் கூறுகிறார் ராணி.

கணவரை விட்டு பன்னிரண்டு வருடம் பிரிந்திருந் தாராம் லட்சுமி என்ற பெண்மணி. மாமியாருக்கு மருமகள் பேரில் துவேஷமாம். அதனால் நீ அவளோடு வாழக் கூடாது!' என்று தன் மகனைக் கட்டுப்படுத்தி லட்சுமியின் கணவரைப் பிரித்து வைத்திருந்தாராம் மாமியார். அம்பா ளிடம் தன் குறையை முறையிட்டு அழுதாராம் லட்சுமி... ஒரு வாரத்துக்குள் வியப்பூட்டும் வகையில் பிரச்சினையைத் தீர்த்து வைத்தாள் அம்பாள். இன்று பன்னிரண்டு வருடங் களாகப் பிரிந்திருந்த தம்பதியர் இணைந்து வாழ்கிறார்கள்...

''பிரார்த்தனைகளுக்கு நேருக்கு நேர் உடனுக்குடன் பதில் சொல்லி அருள் வழங்குவதில் இந்த அம்பாளுக்கு ஈடு அவளேதான்!'' என்கிறார் கேசவமணி. இவர் ஆலயப் பணியிலேயே தன் பெரும்பாலான பொழுதை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ஒரு பக்தர். ''நாம் ஏதாவது பிரார்த்தித் துக் கொண்டு அம்பாளிடம் உத்தரவு கேட்டால், திடீர் திடீரென்று அவள் மேனியிலிருந்து பூ விழும். அல்லது

எலுமிச்சங் கனி விழும். அப்படி விழுந்தால் அம்பாள் நம் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாள் என்று அர்த்தம். அது உடனே பலிக்கும்...! இங்கு வரும் பக்தர்கள் எல்லாமே சாதாரண ஏழைகள்...துன்பத்தால் நைந்து தவிக்கும் நடுத்தரவர்க்கத்தினர்...அவர்கள் அம்பாளை வழிபடத் தொடங்கிய பின் அவர்கள் வாழ்விலேயே ஒருபுதிய தெம்பு ஏற்பட்டு விடுகிறது. குபேர சம்பத்து ஏற்படா விட்டாலும் மன நிறைவோடு அவர்களை வாழ வைக்கிறாள்!'' என்கிறார் அவர்...

இயற்கையனைத்துக்கும் இறைவியான எம்பெருமாட்டிக்கு இயற்கையே பணிந்து செயல்படும் சில அற்புதங்களைக் கூறினார்கள் அங்கே. அவை...!

4

மங்களச் செல்வி மாதா போற்றி,
பொங்கிடும் வளந்தரும் பூரணீ போற்றி
திருவே கலையே திசையே போற்றி
கருவே உயிரே காளியே போற்றி
தருமம் வளர்க்கும் தாயே போற்றி
கரும வினைகளைக் களைவாய் போற்றி
அருள் மகாசக்தியே அன்பே போற்றி
பொருள் பராசக்தியே புத்தியே போற்றி!

——கோலவிழியம்மன் (என்னும் பத்திரகாளி அம்பாள்) போற்றி இசைமாலை.

இறைவனை நம்பாதவர்களும் உண்டு.

ஆனால், அவர்களும் 'இயற்கையே தெய்வம்!' என்று போற்றுகிறார்கள். காரணம், அவர்கள் கண்ணுக்குப் புலப்படுமாறு இயற்கையின் அற்புதங்கள் துலங்கி நிற்கின்றன. அதைமட்டுமே போற்றுகிறார்கள்; நம்புகிறார்கள். சூரியன்,

காற்று போன்ற இயற்கையின் சில அற்புதச் சக்தித் தோற்றங்கள் அவை.

ஆனால், அந்த இயற்கையேதான் தெய்வமா?

இல்லை.

இந்த இயற்கையின் தோற்றங்களில் தெய்வீக சக்தி நிறைந்திருக்கிறது என்பதுதான் உண்மை. ஆனால் தெய்வமோ இந்த இயற்கைச் சக்திக்கு அப்பாற்பட்டது. இயற்கையைத் தன்னுள் உள்ளடக்கியது. அதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 'எங்கெங்கு காணினும் சக்தியடா! தம்பி, ஏழு கடல் அவள் வண்ணமடா! தங்கும் வழியினில் கோடி அண்டம், அந்தத் தாயின் கையில் பந்தென ஓடுமடா! என்றார்.

'அண்டகோடிகளிலும் சக்திமாதா வல்லமையோடு நிறைந்திருக்கிறாள்' என்று போற்றி மெய்சிலிர்க்கிறார் கவிஞர். ஆனால் அவர் இயற்கையே அந்த சக்திதேவிதான் என்று சொல்லவில்லை. அந்தத் தாயின் கைப்பந்து தான் இயற்கை என்கிறார்.

இந்த உண்மையை அன்னை கோலவிழிநாயகியான பத்திரகாளியின் சந்நிதியில் இன்றும் நிகழும் அற்புதக்காட்சிகளிலிருந்து புரிந்து கொள்ளலாம்...

அம்பாளின் சந்நிதியில் நடக்கும் ஒவ்வொரு விசேஷத்தின் போதும், இயற்கை தன் பல்வேறு உருவங்களில் அன்னையை சேவித்து நிற்கிறது!

அன்னையின் சந்நிதியில் சமீபத்தில் 108 பேர் ஒரே சமயத்தில் பொங்கலிட்டு விழா நடத்தினர். பொங்கல் பானைகள் ஏற்றப்படுவதற்கு முன்புவரை அப்பகுதியில் மழையில்லை. ஆனால் பொங்கல் பானைகளை ஏற்றியதும் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. பாதுகாப்புக்காகப் போட்ட சிறுபந்தல் அந்த மழைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒழுகிக் கொண்டிருந்தது. இருந்தாலும், அத்தனை பக்தர்களும்

உறுதியோடு பொங்கல் பானைகளை ஏற்றி பொங்கலிட ஆரம்பித்தனர். மழையும் பெய்தது. இருந்தும் அடுப்பும் எரிந்து, பொங்கலும் பொங்கிக் கொண்டிருந்தது! மழைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆடிக்கொண்டிருந்த பந்தல், அத்தனை பொங்கல் பானைகளும் இறங்கியதும், சரிந்து விழுந்தது. அதனால் ஒருவருக்குக்கூட சேதம் கிடையாது.

—இப்படி இயற்கையின் அம்சமான மழை, அந்தத் திரு நாளில் ஒரு பக்தனைப் போல் அம்பாளை சேவிக்கத்தான் வந்திருக்கிறது. மற்றபடி அந்த மழையால் எந்தப் பக்திப் பணியும் தடங்கல்படவில்லை.

அதேபோல் அம்பாளின் ஆலயத்தில் எந்தப் புது விசேடம் நிகழ்த்தினாலும் அன்று மழை வரத் தப்பாது. முதல் முதலாக அவ்வாலயத்திற்கு 'அம்பாள் விளக்கு' வாங்கிவைக்க குருஜிசுந்தரராமன், திரு. வி.எஸ். பாலகிருஷ்ணன், திரு. அர்ஜுனன் ஆகியோர் முயற்சி செய்து தேடி யலைந்த போதும் நல்ல மழை. இதுபோல் விசேட பூஜை, புதிய திருப்பணி வேலை இப்படி எது ஆரம்பித்தாலும், அம்பாளைச் சேவிக்க ஒரு விசுவாசமான பக்தனாக மழை அங்கு வந்துவிடுமாம். அதனால் எந்த அழிவு வேலையும் நிகழாது.

அதேபோல் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாதவாறு கிட்டதட்ட மூன்று மாதத்துக்குமேல் சூரியஒளி அம்பாளின் மேல் நேரடியாகப் படுமாறு ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. ''ஐப்பசி 14-ம் தேதி முதல் தை முடிய மூன்றுமாத காலத்துக்கு மேலாக இப்படி சூரியதேவன் தொடர்ந்து தன் ஒளிக்கரங்களால் நேர்முக பூஜை செய்வது வேறு எந்தத் தலத்திலுமே காணமுடியாதது'' என்கிறார்கள் ஆன்றோர்.

ஆலயத்தின் முன்னால் நிற்கும் வேம்பும்-அரசும் இணைந்து அமைந்திருக்கும் காட்சியே, இயற்கையின் திருவிளையாடல், அருகருகே அமைந்திராமல் ஒன்றுக்குள் ஒன்றாக இவை அமைந்திருப்பது ஒரு புதுமையான காட்சி.

ஓராண்டுக்கு முன் ஒரு மூதாட்டி கண்பார்வையில்லாத நிலையில் தட்டுத்தடுமாறி ஆலயத்துக்கு வந்தார். அப்போது அங்கு இருந்த குருஜிசுந்தரராமன் அவர்களிடம், கண்ணற்ற நிலையில் தான் படும் வேதனைகளையும், குடும்பத்திலுள்ள மற்றவர்களால் தான் புறக்கணிக்கப்படும் அவலச் சூழ்நிலையையும் சொல்லி முறையிட்டாராம் அம்மூதாட்டி. அப்போது குருஜி சுந்தரராமன் அம்பாளின் நாமத்தை உச்சரித்து விபூதிப்பிரசாதம் கொடுத்து அனுப்பினாராம். கிட்டத்தட்ட ஒருவார காலத்துக்குள்ளேயே அம்பாள் அருளால் அந்த அற்புதம் நிகழ்ந்தது...

மறுவாரம் வெள்ளிக்கிழமை குருஜி ஆலயத்தில் இருக்கும்போது ஒரு பெண்மணி அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து கண்ணீர் பெருக நன்றி கூறினாராம். அது வேறுயாருமல்ல. ஒருவாரத்திற்கு முன்பு பார்வை இழந்திருந்த பெண்மணிதான். இப்போது அந்த மூதாட்டிக்கு கண்பார்வை துலங்கியிருந்தது!

இதைப்பற்றி குருஜி சொன்னார்: ''எல்லையற்றிருக்கும் மின்சார சக்தியை கம்பி மூலம் வரவழைத்து, அதன் பலனை நாம் நல்வாழ்வுச் சாதனங்களுக்குப் பயன்படுத்துவதுபோல், எல்லையற்றிருக்கும் அம்பாளின் கருணையை பக்திமூலம் வரவழைத்தால், அது அற்புதமான பலன்களை மக்கள் மத்தியில் விளைவித்து அவர்களை உய்விக்கும். நம்பிக்கையும், பக்தியும்தாம் அம்பாளின் அருளை நமக்கு வழங்கும் நற்சாதனங்கள்!'' என்றார்.

ஃ ஃ ஃ

இடையில் சில காலம் பராமரிப்பின்றி புகழ்மங்கியிருந்தாலும்இன்று புதுப்புனல்போல் அன்னை பத்திரகாளியம்மன் சந்நிதியில் பொங்கிப் பிரவகிக்கும் பக்தி வெள்ளத்தைக் கண்டு பூரித்து நிற்கிறேன்.

அணுவுக்குள் அணுவாய், அனைத்துக்கும் மூலமாய், அருளுக்கோர் கேந்திரமாய் கருணை சுரக்கும் கோலவிழிச்

சுடர் ஒளி வீச, எந்நாட்டுக்கும் இறைவியாய்— இத்திரு நாட்டுக்கு ஜீவனுய் எழுந்து நிற்கும் அன்னேப் பத்திரகாளி யைத் தரிசிக்க அவள் ஆலயவாசலுக்குச் செல்கிருேம்...

அங்கே...

5

சித்தி தருவாய் சிவையே போற்றி!
முத்தி தருவாய் முதல்வி போற்றி!
காரண காரியக் கமலமே போற்றி!
பூரண ஓவியப் பொற்பதம் போற்றி!
காலத் தலேவியே கதியே போற்றி!
ஞாலத் தரசியே ஞானமே போற்றி!
வெற்றியே தந்திடும் விமலேயே போற்றி!
பொற்புடைத்தாயே, புகலே, போற்றி, போற்றி!

—கோலவிழி அம்மன் (என்னும் பந்திர காளி யம்பாள்) போற்றி இசைமாலே.

எல்லேயற்ற அருள் கொழிக்கும் என் அம்மை ஆதிபரா சக்தியின் அருள். வற்ருத வளம் செழிக்க எங்கும் பரந் தோடும் ஜீவநதியைப் போன்றது.

ஆம்;

ஒரு ஜீவநதியின் எண்ணற்ற ஊற்றுகளேப்போல், மகா சக்தி மாதாவான புனித தெய்வீக ஜீவநதியின் பல்வேறு ஊற்றுக்கண்களாய் எண்ணற்ற ஆலயங்களில் சக்தி தேவி யின் அம்சங்கள் பிரதிஷ்டையாகி, ஆங்காங்கிருந்து மக்க ளுக்கு அருள் பொழிந்து கொண்டிருக்கின்றன.

அவற்றுள் சில தலங்களே மிக விசேடமாக—பல்வேறு சக்தி அம்சங்களுக்குப் பிரதிநிதித்துவம் பெறத்தக்கதாய் அமைத்து—அவற்றில் அம்பாள் உச்சித சக்தியுடன் கொலு விருப்பாள். அத்தகைய மகிமை பெற்ற தலங்களுள் 'கோல விழி அம்மன்' என்னும் இந்தப் பத்திர காளியம்மன் தலமும்

ஒன்று என்னும் சத்தியம் இன்றும் இங்கே மெய்ப்பிக்கப் பட்டு வருகிறது.

சமீபத்தில்—அதாவது இக்கட்டுரைத் தொடர் 'இதயம் பேசுகிறது' இதழில் தொடங்கிய பின் நிகழ்ந்த அற்புதம் இது...

சென்னை சோலையப்ப தெருவிலிருக்கும் ஓர் அம்பாள் உபாசகரிடம் சென்று, பேசும் திறனற்ற ஒரு சிறுமி சார்பில் அவள் குடும்பத்தார் தம் குறையை முறையிட்டுச் சொன்னார்களாம். உடனே அந்த உபாசகர் சோட்டானிக்கரை பகவதியம்மனுக்குப் பிரார்த்தித்துக் கொண்டு, சில பக்தி பூர்வமான நிவாரணங்கள் செய்து, ''நீங்களும் சோட்டானிக்கரை பகவதி அம்பாளுக்கு வெள்ளியால் நாக்கு உருவம் செய்து பிரார்த்தனை செய்யுங்கள்'' என்று சொல்லியனுப்பினாராம்.

அதன்படி, சிறுமியின் வீட்டார் வெள்ளியில் நாக்கு உருவம் செய்து, சென்னையிலிருக்கும் அந்த அம்பாள் உபாசகரிடம் கொடுத்து, அதை அந்த ஆலயத்தில் சேர்த்துவிடுமாறு கூறினார்களாம்.

ஆனால், அம்பாள் உபாசகரின் கனவில் தேவி தோன்றி, ''இந்தப் பிரார்த்தனை உருவத்தை சோட்டானிக்கரை தலத்திற்குக் கொண்டு வரவேண்டியதில்லை என்றும், கோலவிழி நாயகி என்னும் பத்திர காளியம்மனுக்குச் செலுத்திவிட்டால் போதும்'' என்றும் உத்தரவிட்டாளாம்.

அவ்வாறே, பிரார்த்தனையாக வந்த நாக்கு உருவத்தை அந்த அம்பாள் உபாசகர் இந்தப் பத்திர காளியம்மன் ஆலத்தில் செலுத்தினார். அதை அம்பாளுக்கு அலங்காரம் செய்து பார்த்தபோது ஒரு வியப்பூட்டும் உண்மை வெளியாகியது. உத்தேசமாக சோட்டானிக் கரை பகவதி ஆலயத்தில் சேர்ப்பிக்கவெனச் செய்யப்பட்ட நாக்கு உருவம், இப் பத்திர காளியம்மனுக்கு மிகச் சரியாக—இந்த அம்பாளுக்கென்றே செய்தது போல் கச்சிதமாகப் பொருந்தியது!

அன்றிரவு பிரார்த்தனை செலுத்திய வீட்டுக் குழந்தை திடீரென்று 'அம்மா!' என்று அலறியதாம். அதுதான் அந்தக் குழந்தை பேசிய முதல் பேச்சு!

இப்பொழுது குழந்தை நன்ருகப் பேச ஆரம்பித்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி சென்னையில் சென்ற வாரம் நிகழ்ந்திருக்கிறது. ஆலய அதிகாரிகள் இதைத் தெரிவித்தனர்.

சோட்டானிக்கரை பகவதிக்குச் செலுத்த வேண்டிய பிரார்த்தனையை அம்பாளே இப் பத்திர காளியம்மனுக்குச் செலுத்தச் செய்ததுபோல், திருச்சியைச் சேர்ந்த செல்லாயி அம்மா என்ற சக்தி உபாசகர் தம் குரு பீடத்தைச் சார்ந்த விசுவாசமான பக்தர்களுக்கும், சீடர்களுக்கும் ஓர் அறிக்கை விடுத்திருக்கிருராம். 'அனைவரும் தன் சார்பில் கோலவிழியம்மனைத் தரிசித்து, முப்பத்தைந்து பைசா காணிக்கை செலுத்திஞல் சர்வசக்தியின் அருள் சித்திக்கும். அத்தனை மகிமை வாய்ந்தது பத்திரகாளியம்மனின் சந்நிதி!' என்று கூறுகிருர்.

ஃ ஃ ஃ

மயிலாப்பூர் கடலோரத்தில் (கோபதி நாராயண செட்டித் தெருவில், திருக்கோயில் கொண்டு-எல்லை காக்கும் காளியாய், இல்லையெனுது வழங்கும் அருளுக்கோர் எல்லையாய், தொல்லை போக்கும் தூமணியாய், சுடரொளி பரப்பும் லோகமாதாவான என் அம்மை பந்திரகாளியின் சந்நிதியில் கைதொழுது நின்று, அவளுடைய அளவில்லா அருள் விளையாடல்களை எண்ணிப் பார்க்கிறேன்!

பல நூறு ஆண்டுகளாய் அவள் இந்தப் பாரில் நிகழ்த்தி வரும் அற்புதங்களை நினைத்துப் பார்க்கிறேன்.

அவள் ஆலயத்தின் பழமைச் சிறப்பை தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறக் கேட்கிறேன். பல நூற்ருண்டுகளுக்கு முந்திய காலத்துக் கலாசரத்தைக் காட்டும் பேரழகும், கலை நுட்பமும் வாய்ந்த அன்னையின் உற்சவத் திருமேனியைக் கண்டு அதன் வடிவெழிலில் மனம் திளைத்து நிற்கிறேன்!

சில ஆண்டுகளுக்கு முன்புவரை என் அம்மை இந்த மயிலாப்பூர் எல்லைக்கு மாத்திரமல்லாது, இச்சென்னை மாநகருக்கே எல்லைத் தெய்வமாகத் திகழ்ந்த சேதி கேட்டுப் பூரித்து நிற்கிறேன்!

'முன்பெல்லாம் திருவிழா காலத்தில் அம்மா ஊர்வலம் புறப்பட்டால், சென்னையிலுள்ள ஒவ்வொரு பேட்டையாகச் சுற்றி எண்ணூர் வரைக்கும்போய் விட்டுத்தான் திரும்புவாள். ஒரு சுற்று போய்வர மூன்று மாதம் குறையாமல் ஆகும்!' என்று முதியவர்கள் கூறக்கேட்டு, அவள் மகோன்னதத்தை உன்னி பூரித்து நிற்கிறேன்!

'வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் நம்ப ஜனங்கள் மட்டுமல்லாது, கோட்டையிலிருந்து வெள்ளைக்கார ஆபீசர்கள்கூட அம்பாளை வருடத்துக்கு ஒருநாள் வழிபட்டிருக்கிறார்கள்! அதற்கான ரிக்கார்டுகள் உண்டு!' என்று அப்பகுதி மக்கள் கூறுவதைக் கேட்டு மகிழ்ந்து நிற்கிறேன்!

கூடவே, 'இத்துணை மகிமை வாய்ந்த தெய்வத்தின் சொத்துக்களை ஆக்கிரமித்து, அம்பாளுக்கே சிலகாலம் பூஜையில்லாமல் போட்டுவிட்டார்களே!' என்று மக்கள் குமுறுவதைக் கேட்டு கண் கலங்குகிறேன்...

இதையும் மீறி—காலத்தை வென்று, கயமைக் காட்டாற்றில் எரிநடனம் ஆடி—என் அம்மை பத்திரகாளி இன்று வீறுகொண்ட விழியும் வெற்றி கொண்ட சூலமுமாய் இமயச் சிறப்பாய் எழுந்து, தன் அருள்வெள்ளத்தில் அனைத்து மக்களையும் ஆண்டருளும் அற்புதத் திருக்காட்சி கண்டு மெய்சிலிர்த்து நிற்கிறேன்.

அம்பாளின் மகோன்னதச் சிறப்பை மீண்டும் காணும் உற்சாகத்துடன் ஆலயத் திருப்பணியில் அயராது ஈடுபட்டு உழைக்கும் கபாலீஸ்வரர் ஆலயநிர்வாகிகள், ஊழியர்கள் அனைவருடைய எறும்பனைய சுறுசுறுப்பான பணியைக்கண்டு வியக்கிறேன். பக்தர்களுக்கு அருட்துணையாகத் திகழும் குருஜி சுந்தரராமன் அவர்களின் அயராத பணியைக்கண்டு

மெய்சிலிர்க்கிறேன். பழம்பெரும் சின்னங்களோடு திருப்பணி உருவாக்கும் புதிய கோலங்கள் கொண்டு அம்பாளின் ஆலயம் ஒளிவிடும் திருக்காட்சி ஓர் உன்னத உணர்வை என்னுள் கிளர்ந்தெழச் செய்கிறது...ஆம்; அவள் ஆலயத்தின் இன்றையத் தோற்றத்தைப் போலவே நேற்றையத் பெருமைகளுக்கும், இன்றைய புதுமைகளுக்கும் அருட்பாலமாய்—இருபெரும் சக்திகள் அவள் திருப்பாதங்களில் சங்கமிக்க, விண்ணூர்ந்த மகிமைகளுடன் தன் கோலவிழிச்சுடர் மின்ன வெற்றிதரும் கொற்றவையயய் திருக்காட்சி அருளி நிற்கின்றாள் அன்னை!

ஃ ஃ ா

அவள் ஆலயத்துள் நுழைகிறோம்...கீர்த்திப் பெற்ற மூர்த்திகரமான என் அம்மாவின் ஆலயம் சிறிதானாலும், அங்கு பொங்கும் அருள் மணம் மாணப்பெரிது...!

நெஞ்சம் கரைந்துருக கைதொழுது என் அம்மா பத்திரகாளியின் பொற்பாதம் போற்றி நிற்கிறேன்...

ஆ! என் தாயின் நெடிதுயர்ந்த, எடுப்பான திருவுருவ தேஜஸில் சித்தம் பறிகொடுத்து நோக்குகிறேன்...அவள்... திருவழகை எப்படி விளக்கிடுவேன்......என்னென்று...... கூறுவேன்......!

அவள் அருளை உணர்த்தும் சிரசின் ஜுவாலையில் பதினைந்து இதழ்கள், நடுவில் உச்சித அலங்காரமாய் நாகம் அவள் திருமுடியில் இடதுபுறம் சந்திரனும், சிவனும்; வலதுபுறம் நாகம்...அன்னையின் காதில் காண்பது ஓலைக்குழலா, சர்ப்பமா, ருத்திராட்சமா...? காலத்தை வென்ற தாயின் காதணியை கண்டுணர முடியவில்லை.

அஷ்டபுஜம் கொண்ட அம்மாவின் வலப்புற மேல்கரத்தில் வெற்றிச்சூலம், அடுத்ததில் கத்தி, மூன்றாவதில் தமருகம் (சர்ப்பம் சுற்றிய உடுக்கை). நான்காவது கரத்தில் சூரனை சம்ஹரித்ததலை. இடது மேற்கரத்தில் கேடயம்,

அடுத்ததில் அங்குசம். மூன்றுமதில் மணி. நான்காவதில் கபாலம்.

அமர்ந்த திருக்கோலத்தில் காட்சிதரும் அம்பாளின் வலது முழங்காலை சர்ப்பம் தாங்கிக் கொண்டிருக்கிறது. இடது காலை தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறாள். அந்தப் பாதத்தின்கீழ் அவள் சம்ஹரித்த சூரன் காட்சிதருகிறான். மார்பில் சர்ப்பக்கட்டு என்னும் நாககச்சை.

கண்கள் பொங்க சூரனை வதைத்த என் ஜோதித்திருத் தாயை தரிசித்து நிற்கிறேன்...

துர்க்கையாய் மாகாளியாய் பத்ரையாய், ருத்ர வடிவம் சம் கொண்டவளாய் எழுந்தருளியிருந்தாலும் இத்தலத்தில் அவள் கருணாமிர்த வாரிதியாய் கனிவுற்று, தன் கோலவிழிகளால் குவலயம் காத்து நிற்கிறாள்......அவள் விழிகளில் உக்கிரம் இல்லை. உலகைக் காத்து உய்விக்க வந்த அருட் ஜோதி மின்னுகிறது.........

வேளைக்கு ஒருமுறை அவள் ஜோதி முகத்தில் அருட்களை மாறி மாறித் தோன்றுகிறது......ஒருகணம் வல்வினைகளையும் பிணிகளையும் சுட்டெரிக்கும் கோபம்; அடுத்தகணம் அமிர்த சுரங்கமாய் சாந்தம் தவழும் புன்னகை......!

அம்மா, எளியராம் எமைக் காக்க எத்தனை கோலம் கொண்டாய்! எத்தனை காட்சி தந்தாய்!

பொன்னென்பார், பொருளென்பார்...பூதலம் காத்த தாயே உன் அருள் புன்னகை காணாரே!

மன்னே, மாமணி! மாசுற்ற மாந்தர்க்கூட்டம் மாட்டிடும் மடமை போக்க தேசுற்ற கோலம் கொண்ட திருவே! திருவிடம் காக்கவந்த அருள்சுடரே! ஜோதியே! சுடர்முகமே! சுந்தரமே! அன்னாய், அருள்நல்கும்மின்னே! தென்னவளே என் தாயே! தீரா வல்வினை போக்க திருச்சூலம் ஏந்தி நிற்கும் கண்ணே! கவின்பெறும் கருணை ஊற்றே! காக்கும்

கரம்தேடி காசினியில் புகல் தேடி கைதொழுதோம் நின் கழல்பற்றி! கொற்றவையே! உற்றவளே, நின் பதமே போற்றியம்மா! வாட்டும் துயர்போக்கி வாழ்த்தி எமை ஆட்சி செய்வாய் வல்லவளே, மாதாவே! ஞாலம் புரந்தருள கோலவிழிகொண்ட கோவே, என் குலத்தாயே, பத்திர காளியம்மா!

அருள்மிகு கோலவிழி அம்மன் அருள் பெற வழிபாட்டு முறை

(ஸ்ரீமௌன குரு சுவாமிகள் மடத்தின் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ குருஜி சுந்தரராமன் அவர்கள் பக்தர்களுக்காக நிர்ணயித்து வழங்கியிருப்பவை.)

1. கோயிலுக்கு வருபவர்கள் உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் கொண்டிருக்க வேண்டும்; நெற்றியில் குங்குமம் அல்லது விபூதி இட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

2. கைகால்களை சுத்தம் செய்துகொண்டு கோயிலுக்குள் செல்லவேண்டும்.

3. பூஜைக்கு வேண்டிய தேங்காய், வெற்றிலை,பாக்கு, பழம், புஷ்பம் ஆகியவற்றைக் கூடையிலோ மூங்கில் தட்டிலோ எடுத்துச் செல்லவேண்டும்.

பிளாஸ்டிக் கூடையிலோ தட்டிலோ அல்லது ஈயம் பூசிய தாம்பாளத்திலோ எடுத்துச் செல்லக்கூடாது.

4. தேங்காய் மஞ்சள் பூசப்பட்டு, நல்ல குங்குமத்தால் ஐந்து பொட்டுகள் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

5. மல்லிகை, பிச்சிப்பூ, மருக்கொழுந்து, வெள்ளைத் தாமரை ஆகிய புஷ்பங்கள் பூஜைக்கு உகந்தவை. கனகாம்பரம், காட்டுப் புஷ்பங்கள், வாசனையற்ற புஷ்பங்கள்

பூஜைக்கு ஏற்றவையல்லாத பிறவகைப் புஷ்பங்களும் கொண்டு செல்லக் கூடாது.

6. அம்மனை வழிபடச் செல்பவர்கள், அமைதியாக தியானம் செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருப்பதோ கூச்சல் போடுவதோ கூடாது. அமைதி யாக அமர்ந்து தியானம் செய்யவேண்டும்.

7. 16 தடவை பிரதட்சினம் செய்யவேண்டும். பிர தட்சினம் செய்யும்போது பக்திப்பாடல்களை மனதிற்குள் பாடிக்கொண்டு செல்லவேண்டும். உரத்த குரலில் பாடு வதைத் தவிர்ப்பது நல்லது.

8. கன்னிப் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் முக் கூட்டு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, பூஜைக்குரிய பொருட்களை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

9. தாமரை நூலில் தீபம் ஏற்றி வைப்பது நல்லது.

10. நவதானியங்களில் மூன்று தானியங்களைக் கலந்து, தூய்மையான துணியில் மொத்தம் 27 சிறு கிழிகள் கட்டி, நெய்யில் 27 தீபங்கள் ஏற்றி வைப்பது நற்பலனளிக்கும்.

11. அங்கப் பிரதட்சினம்: காலையில் ஸ்நானம் செய்துவிட்டு, ஈர நூல் புடவையுடன், மஞ்சள் தேங்காயை இரு கைகளிலும் ஏந்திக் கொண்டு அங்கப் பிரதட்சினம் செய்யவேண்டும். அங்கப் பிரதட்சினம் செய்யும்போது அருகில் இருப்பவர்களுடன் பேசக்கூடாது. அங்கப்பிரதட் சினம் செய்து சந்நிதிக்கு எதிரில் வந்ததும் எழுந்து நமஸ் காரம் செய்து தேங்காயை உடைக்க வேண்டும்.

12. அபிஷேகம்: அபிஷேகத்திற்குரிய பொருட்களை பித்தளைப் பாத்திரங்களிலேயே எடுத்துச் செல்ல வேண்டும். ஈயம் பூசிய பாத்திரங்களையோ எவர்சில்வர் பாத்திரங் களையோ பிளாஸ்டிக் பாத்திரங்களையோ உபயோகிக்கக் கூடாது.

13. இஷ்ட சித்திக்காக பிரார்த்தனை செய்பவர்க்ள் 19 தடவை பிரதட்சினம் செய்ய வேண்டும்.

14. பச்சை மஞ்சளில் தயாரிக்கப்பட்ட குங்குமத்தையும் சுத்தமான சூடத்தையுமே உபயோகிக்க வேண்டும்.

15. பிரார்த்தனை முடிந்து சந்நிதியிலிருந்து வெளி வரும்போது, அம்மனைப் பார்த்துக்கொண்டே நடந்து வர வேண்டும். கருவறையை விட்டு வெளியே வந்த பிறகுதான் நேராகத் திரும்பி நடக்கவேண்டும்.

அருள்மிகு அதர்வண பத்ரகாளி பிரதியங்கிரா தேவி துதி

(பாடியவர் : சௌந்தரா கைலாசம் அவர்கள்)

அதர்வண பத்ர காளியே வாழ்க!
அருள்விழி பார்த்தெனை ஆதரித் திடுவாய்!
இதமுற நித்தமும் இனிதனைத் தினிமேல்
இடரேதும் வாழ்வினில் இலையெனச் செய்வாய்!
பதமலர் என்தலை படஉனை வணங்கிப்
பகலிலும் இரவிலும் பரவிநிற் கின்றேன்!
சதமென நினைந்திடத் தரணியில் உன்தாள்
தவிரவே றொன்றிலை சத்தியம் தாயே! (1)

சென்னியின் இடப்புறம் திகழ்பிறை மதியாய்!
சீறிடும் பாம்பினை வலப்புறம் உடையாய்!
உன்வலச் செவியினில் ஒளிதரும் குழையாய்!
உயர்வுறு சோடசை இடச்செவி அணித்தாய்!
புன்மையைப் போக்கிடும் நாலிரு கரத்தாய்!
புவனவ சீகரப் பிரதியங் கிரேஹ்ரீம்!
நன்னயக் காம பீஜமாம் இன்ப
நாத மந்திர ''க்லீம்'' அதில் உறைவாய்! (2)

சூலமும் கத்தியும் உடுக்கையும் தலைகீழ்
 தொங்கிடும் மனிதனும் வலப்புறம் அமைந்த
நாவெனும் கைகளில் தாங்கிடும் காளீ!
 நான்மறை போற்றிடும் நாயகி! நீலி!
மேலெனும் கேடயம் பாசமும் மணியும்
 விளங்குக பாலமும் இடக்கரம் நான்கில்
சீலம தோங்கிடக் கொண்டனை நீயே!
 சிறந்தநற் கோல விழியுடைத் தாயே! (3)

எங்கணும் ஒளிவிடும் எரிகுழல் கொண்டாய்!
 இரண்டெனும் கோர எயிறினைப் பெற்றாய்!
தொங்கிய செந்நாச் சுழற்றிடும் அன்னாய்!
 தோன்றிய பகைகள் தொலைத்திடும் தேவீ!
மங்கள சண்டி, முக் கண்ணீ, ஓம் காளீ!
 மகிஷனின் மார்பிலே உதைத்திடும் காளீ!
பங்கயத் திருவடி பற்றினேன் தாயே!
 பரிந்தருள் புரிந்திட விரைந்திடு வாயே! (4)

ஆங்கிரஸ் பிரதியங் கிரஸ்எனும் ரிஷிகள்
 அற்புதம் சமைக்கும்உன் மந்திரம் கண்டார்!
பாங்குடை நிரும்பலை வேள்வியின் தலைவீ!
 பன்னெடும் காலமும் கடந்திடும் காளீ!
ஓங்கிய வான்மழை மேக நிறத்தீ:
 உயரிய கருணையை வழங்கிடும் சக்தி!
வீங்கிய நெஞ்சகத் திருள்களைந் தின்பம்
 மேவிய வாழ்வினை நீதரு வாயே! (5)

வாயுவின் அம்சமாய் விளங்கிடும் உன்னை
 வணங்கிய பேர்க்கெலாம் வளர்ந்திடும் இன்பம்!
போய்விடும் பற்றிய புற்குணம் எல்லாம்;
 பொருதிய எதிரிகள் பொட்டென மாய்வர்!
மாயவன் அர்ச்சுன னவனிடம் சொன்னாள்
 ''வாழ்த்திடு காளியைப் போர்வெல'' என்றே!
பாயுமோர் சிங்கநல் வியல்பினைக் கொண்டாய்!
 பாபவி நாசினி! பைரவி! சூலி! (6)

மண்டிய பக்தியால் ''ஐம்'' என ஓதி
வணங்கிடு வார்க்கருள் சுரந்திடும் தேவி!
கண்டெனும் ''ஹ்ரீம்'' அதை ஓதிய மாந்தர்
கவலைகள் போக்கிநல் வாழ்வினைச் சேர்ப்பாய்!
அண்டிய தீமைகள் யாவையும் தீர்ப்பாய்
அன்புடன் ''க்லீம்'' என ஓதிய யார்க்கும்!
எண்டிசை அரசுசெய் சாமுண்டி காளீ!
என்றுமே மங்களம் தங்கிய தாயே! (7)

திதியெனும் அஷ்டமி அதனிலே உன்றன்
திருவடி தொழுதிட வருபவர்க் கென்றும்
விதியது குறையற விளங்கிடச் செய்து
வேண்டிய நன்மைகள் விருப்புடன் ஈவாய்!
கதியென உன்னையே கண்டுநெஞ் சாரக்
காலங்கள் யாவையும் கைகுவிக் கின்றேன்!
அதிசயம் கோடியென் றாக்கிடும் மாயே!
அகவொளி பெருகிட வழியமைப் பாயே! (8)

அன்புடன் உனைநிதம் நினைப்பவர்க் கெல்லாம்
அட்டமா சித்திகள் அளித்திடும் அன்னாய்!
இன்பமும் துன்பமும் இரண்டல ஒன்றே
எனுமொரு நிலையினை எனக்கருள் செய்வாய்!
உன்பெயர் தனையுரைத் துருகிடும் காலம்
ஒருநொடி ஆயினும் உயர்ந்தது தாயே!
என்பணி இனிஉனைத் தொழுதுளம் உருகி
இருவிழி வழிநீர் உருத்தழல் தானே! (9)

''ஓம்க்ஷும் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே
கராள தம்ஷ்ட்ரே பிரதியங் கிரே
ஓம்க்ஷும் ஹ்ரீம் ஹிம்பட் ஸ்வாஹா''!
உனைநினைந் தரியஇம் மந்திரம் ஓதி
தீம்பழச் சாறினை மாந்திய மகிழ்வில்
திளைத்துநின் றனுதினம் வழுத்துகின் றேனே!
மேம்படு நிலையினை எய்துவேன் உன்றன்
மெல்லிய பூவடி நீழலில் யானே! (10)

மயிலாப்பூர் முண்டகக் கண்ணி அம்மன் தரிசனம்

1

ஆறு வண்டி நூறு சட்டம்-எங்க அம்மா மாரிக்கு
அசையா மணித் தேருகளாம்
தேரை நடத்தியல்லோ—மாரி
சித்திரங்கள் பாடி வாரா—மாரிக்கு
பூட்டின தேரிருக்கப்
புறப்பட்டாள் வீதியிலே
வீதி மறித்தாளம்மா-மாரி
வினைதீர்க்கும் சக்தியல்லோ!

—மாரியம்மன் பாமாலை

மாதராய் பிறந்திட மாதவம் செய்திடும் மயிலையம்பதி!

அன்னை லோக மாதாவே மயிலாய் நடந்திட கருணைக் கோர் கற்பகமாய் ஒளிர்ந்திட தேர்ந்து எடுத்தத் திருநாடு மயிலாப்பூர் பெரும்பதி.

அறுபத்துமூன்று நாயன்மாருக்கும் தொண்டர்கள் திருப் பூஜையும், திருவிழாவும் நடத்தும் பெருமை இங்கு உண்டு.

இத்தனை மகிமைக்கு இடையே முத்தான பெருமையாக மக்களுக்குத் திருவருள் சுரக்க அமர்ந்து இருக்கிறுள். எம் ஆத்தா முண்டகக்கண்ணி;

'முண்டக்கண்ணி' அம்மன் என்று பேச்சு வழக்கில் சொல்லப்படும் அந்தத் தாயின் பெயர் முண்டகக்கண்ணி. 'முண்டகம்' என்ருல் தாமரை. தாமரை போன்ற உன்னத விழிகள் பெற்றவள் எம் ஆத்தா என்று பொருள்.

அதிசயமாக, 'முண்டக்கண்ணி' என்ற பதத்திற்கும் ஒரு விளக்கத்தை சொன்னுர் சுந்தரமூர்த்தி நாயக்கர். அந்த ஆலயத்தில் அம்மனுக்கு பூஜைப்பணி விடை செய்யும்

பாக்கியத்தைப் பெற்றவர்களான வன்னியகுல க்ஷத்திரிய (நாயக்கர்) இனத்தைச் சேர்ந்தவரான அவர் சொன்ன தகவல், அன்னையின் அபூர்வமான—அதாவது உருவத் தெளிவு இல்லாமல், சக்திகளில் எந்த அம்சத்தைச் சேர்ந்த வள் இந்தத் தாய் என்று எளிதில் உணர'முடியாமல் அற்புத விநோத உருவம் கொண்டிருக்கும் ஆத்தாளின் அம்சத்தைக் கண்டுபிடிக்க ஊகிக்கத் தூண்டத்தக்கதாகும்.

''இது ஒரு ரேணுகாதேவியின் அம்சம். முண்டம் வேறு தலைவேறு ஆக தன்பிள்ளை பரசுராமன் துண்டித்ததை நினைவுபடுத்துவதற்கு இந்த முண்டத்தோடு அம்பாள் அமர்ந்திருக்கிறாள்'' என்றார் அவர்.

ஆனால் அற்புத உருவத்துடன்—சாதாரணமாக வேறு எந்தத் சக்தித் தலத்திலும் காணமுடியாத புதுமையான திருக்கோலத்தில் அன்னை எழுந்தருளியிருக்கும் திருக்காட்சியைக் காணும்போது...

மஹாசக்தி வாய்ந்த இந்தத் திருக்காட்சியை எத்தனை எத்தனையோ மறைபொருளால் ஆன தத்துவங்களையும்—மகத்தான உலகியல் விளக்கங்களையும் அளிப்பதற்குத்தான் அன்னை தாங்கிக் கொண்டிருக்கிறாளோ என்று நான் பரவசத்துடன் கண்ணீர் மல்க தரிசித்து நிற்கும் எனக்குத் தோன்றியது.

ஆயிரம் தெய்வங்கள் இங்கு உண்டு. அன்னையின் அம்சமாக அவற்றிற்கு இலட்சோப லட்சம் ஆலயங்கள், பீடங்கள் இந்த மணம் கமழும் தமிழகத்தில் உண்டு. அத்தனை கோலங்களில் இருந்தும் வேறுபட்டதாய் ஓர் அபூர்வ எளிமையுடன் அன்னை இங்கு அமர்ந்திருக்கிறாள்.

முன்னைய மன்னர்களும் சரி; இன்றைய செல்வந்தர்களும் சரி. தெய்வங்களுக்கு கல்லால் பெருங் கோயில்களை நிர்மாணித்து இருக்கிறார்கள்.

அங்கெல்லாம் மனம் உவந்து லோகநாயகியும், சர்வேஸ்வரனும் இருக்கை கொண்டிருக்கிருர்கள். மக்களின் மன சக்தியை ஆசீர்வதிப்பதுபோல்.

ஆத்தா முண்டகக்கண்ணித் தாயோ இந்தத் திருத்தலத்தில், 'நான் இருக்கும் கருவறைக்கு கல் மண்டபமோ, சுவர் கட்டடமோ தேவையில்லே. ஓலேக்குடிசை போதும்' என்று அருள்வாக்காய் கூறி தம் எண்ணத்தை நிறைவேற்றியிருக்கிருள்.

ஆம்; முகப்பின் முன்வாசலில் சுதையாலான ராஜகோபுரமும், உள்ளே கருங்கல்லால் மண்டபமும் அமைந்திருந்தாலும் அன்னேயின் கருவறை மட்டும் ஓலேயாலேயே அமைந்திருக்கிறது.

அன்னேயின் ஆலய நிர்வாக அதிகாரிகளும் சிப்பந்திகளும் கூட அவர்களுக்கு ஏற்ற கல் கட்டிடத்தில் அமர்ந்திருக்கிருர்கள். ஆனால், நம் ஆத்தா முண்டகக்கண்ணி தேவியோ கீத்து ஓலேக்குடிசைக்குள் அமர்ந்து எளியவர்களுக்கு இணேயாய், எல்லாருக்கும் துணேயாய் அருட்கோலம் பூண்டிருக்கிருள்.

''இவள் ஏழைக்குத் தெய்வம். எத்தனேயோ கஷ்ட நஷ்டங்களில் அவகிட்டே போய் முறையிடுவேன். அவ கோயிலிலிருந்து வீட்டுக்குப் போறதுக்குள்ள பல சமயங்களிலே கோரிக்கை நிறைவேறியிருக்கு. அப்படிப்பட்ட ஒரு சக்தியுள்ள, ஏழைக்கு இரங்கும் தெய்வம்'' என்கிருர் மயிலே, ராமச்சந்திரராவ் ரோடில் 21-ம் எண் இல்லத்தில் இருக்கும் திருமதி மீனு சந்திரசேகர்.

''என் பேரன் கோபாலகிருஷ்ணனுக்கு திடீரென்று டிப்தீரியா வந்துவிட்டது. டாக்டர் எல்லாரும் பிழைக்கமாட்டான்னுதான் சொன்னுங்க. ஆனுநாங்க பிடிவாதமா கிராம தேவதையான முண்டகக்கண்ணி அம்மா மேல்பாரத்தைப் போட்டுட்டோம். ஒரே நாளிலே குணமாயிட்டது'' என்ருர் திருமதி மரகதம்.

மந்தைவெளிப் பாக்கத்தைச் சேர்ந்த திருமதி கல்யாணி வரதராஜன் ஒரு சுவையான செய்தி சொன்னார்—'தாதா பார்மா' கம்பெனியில் ஓர் உயர்ந்த பதவியிலிருக்கும் அவருடைய கணவருக்கு அடிக்கடி மாற்றல் உத்தரவு வருமாம். சமீபத்தில் வெளிநாடு செல்ல வாய்ப்பு ஏற்பட்டதாம். வெளிநாடு செல்ல கல்யாணிக்கு பிரியமில்லையாம். அதனால் முண்டக்கண்ணி அம்மனிடம்போய், அந்த ஆர்டர் கான்சல் ஆகவேண்டும் என்று பிரார்த்தித்தாராம். அதன்படி மிக அதிசயமாக அந்த உத்தரவு கான்சல் ஆகிவிட்டதாம்!

''குழந்தைக்கு கண்ணிலே அம்மை போட்டிருந்தது. பொண் குழந்தை கண்ணிலே ஏதாவது ஆயிடுத்துன்னு என்ன கதி ஆகுமென்று துடிச்சு அம்மன் காலடியிலே வந்து விழுந்தோம். போட்ட முத்தை குழந்தைக்கு எந்த மாசு மருவும் இல்லாமல் நீக்கிட்டாள்'' என்கிறார் திருமதி ராதா பாய் பரவசத்துடன்.

அச்சமயம் ஒரு மூதாட்டி மெய்யுருகப் பாடும் குரல் நம் காதில் விழுகிறது......

''தோளிலே போட்ட முத்தை மாரி
துணிவாக இறக்கிடுவாள்!
வயிற்றிலே போட்ட முத்தை மாரி
வரிசையாய் இறக்கிடுவாள்
முட்டுக்கால் முத்தை மாரி முடித்
திருந்து இறக்கிடுவாள்
கரண்டக்கால் முத்தை மாரி காணா
மல் இறக்கிடுவாள்
பாதத்து முத்தை மாரிபாராமல்
இறக்கிடுவாள்
ஐந்துசடை கொஞ்சிவர, மாரி அழகு
சடை மார்புரள
கொஞ்சும் சடையிலேயே மாரிக்கு
இரண்டு குயில் இருந்த தாலாட்ட'

—அன்னையை நோக்கி நெக்குருகி அந்த மூதாட்டி பாடும் கிளர்ச்சி மிக்க கீத ஒலியை செவிமடுத்தவாறு பக்தர்கள் எல்லாம் மெய்மறந்து நிற்கின்றனர்.

சாம்பிராணி வாசகியாம் சர்வலோக நாயகியாம், சாட்டை சலசலக்க சதுரமணி ஓசையிட, கச்சை கலகலங்க கருங்கச்சை குஞ்சமிட, வேல் கொண்டு சூல் கொண்டு அவள் வீதியெட்டும் விளையாடி வருவதுபோல்—எங்கும் ஒரு பிரமையோடு அந்த புவனேஸ்வரியை நோக்கி தொழுது நிற்கின்றோம்.

இந்த எளிய ஆலயத்துள் அமர்ந்து எத்தனை இல்லங்களில் எம் மாதா விளக்கு ஏற்றி வைத்திருக்கிருள்! விழி என்னும் கருணை வேல் கொண்டு அவள் வினைதீர்த்த குடும்பங்கள்தான் எத்தனை எத்தனை!

2

அண்டங்கள் எண்ணிலவாம் ஆருயிர்கள் எண்ணிலவாம்
கொண்டனை நீ கருப்பரெனத் திருப்பிரம ஒளியோனி
கண்டுயிர்த்த உலகன்னுய் கடையேற்குத் தாயிலேயோ
முண்டகக் கண்ணித்தாயே முதல்வீயுன் அடைக்கலமே!

—முண்டகக்கண்ணி பாமாலை

மாந்தரில் உயர்ந்தவர் யார்...?

தன்னை உணர்ந்தவனும், தன்னிலை புரிந்து அதன்படி தன்னை நெறிப்படுத்திக் கொள்ளுபவனும்தான்—இது ஆன்றோர் வாக்கு...

அப்படிப்பட்ட அரிய மானுடத் திறன் சாமான்ய அஞ்ஞான மக்களான நம்மிடையே ஏது?

நம்மையே உணர முடியாத நம் மத்தியில் தன்னையே வெளிப்படையாகக் கண்டுபிடிக்கமுடியாதபடி ஓர் அபூர்வத் தோற்றத்துடன் அன்னை முண்டகக்கண்ணி அம்மன் அருள்

சொரிந்து திருக்கோயில் கொண்டிருக்கிருள் சென்னை-மயிலாப்பூரில்.

ஆதிபராசக்தியின் எந்த அம்சத்தைச் சேர்ந்தவளோ என்று கண்டு உணர முடியாத மயக்கத்தில் ஆழ்ந்ததால், பல்வேறு அன்பர்களிடம் விளக்கம் கேட்டேன் நான்.

அத்தலத்திலேயே பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் பூபதி சுவாமிகள் என்ற மெய்யன்பர் சில அபூர்வத் தகவல்களை வெளிப்படுத்தினர்...

''இந்த மயிலாப்பூர் திருத்தலத்திலே மிகவும் பூர்வீகமாக எழுந்தருளிய 'கிராம தேவதை' முண்டகக்கண்ணி தாய்தான். மயிலாப்பூர் கற்பகாம்பாள் ஆலயம் இப்போது இருக்கும் இடத்தில் முன்பு இல்லை. முன்பு சாந்தோமில் இருந்தது அந்தக் கற்பகாம்பாள் ஆலயம். அந்தக் காலத்திலிருந்தே மகிமை பெற்றிருந்தது இந்த முண்டகக்கண்ணி அம்மன் தான். இந்த அம்மனைப் பற்றி ஓர் தெளிவான அடையாளம் யாருக்குமே புரியவில்லை.

ஆனல், இத்தலத்தில் 'தாமரைக் கண்ணி' அம்மனக சதா குளிர்ந்த நீர் சூழ, தாமரை இலையில் அமர்ந்திருக்கும் திருவாகத்தான் அன்னையை மக்கள் வழிபட்டு வருகிருர்கள்'' என்கிருர்.

'அப்படியாயின் தாமரை மலரில் இருக்கை கொண்ட திருவான மகாலட்சுமி அம்சமா?'

''அப்படியும் முழுக்க முழுக்கச் சொல்வதற்கில்லை. இங்கே தேவிக்கு முன் காலத்தில் கிராம மக்கள் உக்கிர பூஜை நடத்தியிருக்கிருர்கள். மாரியம்மா போன்ற மகா காளி அம்ச தேவிகளுக்குத் தான் இத்தகைய வழிபாட்டு முறை முன் காலத்தில் உண்டு'' என்கிருர் பூபதி சுவாமிகள்...

ஃ ஃ ஃ

அன்னை இங்கே லட்சுமி தேவியின் அம்சமாக அமர்ந் திருக்கிருளா? மகாகாளியின் அம்சமாகக் குடி கொண்டிருக் கிருளா? எல்லையம்மனுகிய ரேணுகாம்பாளின் அம்சமாக இடம் பெற்றிருக்கிருளா? கிருஷ்ணமாரியாய் கோவில் கொண்டிருக்கிருளா...?

—இவற்றில் எது என்று கூற யாருக்கும் வல்லமையில்லை. ஆனுல், தாமரையில் அமர்ந்திருக்கும் இந்தத் தாமரைக் கண்ணித் தாயாரோ அத்தனை சக்தியம்சங்களையும் தன்னுள் அடக்கி, 'ஆதிபராசக்தி'யின் வல்லமையோடு திகழ்கிருள் என்பதை அனவரதமும் அங்கு கூடும் பக்தர்கள், பணிந்து நிற்கும் எளியோர், ஏதும் அற்றோர் அனைவரும் மெய்யால், உணர்வால், உணர்வின் அனுபவங்களால் அறிந்து அந்தத் தேவதேவியின் திருவருளைத் தினம் போற்றி உய்வுற்று மாண் புறுகின்றனர்.

ஓர் அன்பர், வைத்தியநாதன் என்று பெயர். கண் பார்வை இழந்த நிலையில் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையான முண்டகக்கண்ணி அம்மன் சன்னதிக்கு வந்து ஒரு மண்டலம் பிராத்தனை செய்தார். தீர்த்தத்தில் நீராடி அன்னையின் சன்னதியை வலம் வந்து நம்பிக்கை தீர்க்கமான பக்தியுடன் பூஜித்ததின் பலன் ஒரு மண்டலம் (48 நாட்கள்) முடிவதற்குள் அவர் அனைவரும் வியக்கும் வண்ணம் கண் பார்வை பெற்ருர்!

இச் செய்தியை ஆலப நிர்வாகியும் பூபதி சுவாமிகளும் கூறினுர்கள்.

சமீபத்தில் சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இந்தச் சம் பவத்தை பல சிந்தனுவாதிகளால் ஒப்புக்கொள்ளவே முடியாமல் போயிற்ரும். அதன் காரணமாக அவருக்கு பல மருத்துவப் பரிசோதனைகள் செய்து பார்த்தார்களாம். கடைசியில், தெய்வ அருளால்தான் அவருக்குப் பார்வை திரும்பக் கிடைத்தது என்று அந்த ஆராய்ச்சியில் கண்ட றிந்த பின்னர் ஆய்வு செய்தோர், சந்தேகித்தோர்

அனைவருமே அன்னையின் திருப்பாதத்தில் விழுந்து மெய் யுருகி நின்றனராம்.

"இந்த அம்பாளை எந்த நிலையிலும் எங்கிருந்து வேண்டி ஞலும் பெற்ற தாயாககூட இருந்து குலம் காப்பாள்!" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறுகிறுர் திருமதி சேது லட்சுமி கேசவமூர்த்தி.

சென்னை, மந்தைவெளியைச் சேர்ந்த திருமதி சேது லட்சுமிக்கு குழந்தைப் பேற்றின்போது ஒரு மாபெரும் சிக்கல் நிகழ்ந்ததாம். மகப்பேறுக்காக ஆஸ்பத்திரியில் அவரைச் சேர்த்திருந்தபோது, மருத்துவர்கள் குறிப்பிட்ட காலக்கெடு கடந்த பின்னும் குழந்தைப் பிறப்பதற்குரிய அறிகுறி எதுவுமின்றி குழப்பமான நிலை ஏற்பட்டதாகும். அச்சமயத்தில்தான் முண்டகக்கண்ணி அம்மனின் நினைவு தோன்றவே மருத்துவ நிலையத்திலிருந்தே வேண்டிக்கொண் டார்களாம்.

சிலமணி நேரங்களுக்குள்ளேயே அற்புதமாய் சுகப் பிரவசமாகிவிட்டதாம். அப்போது பிறந்த தன் கைக் குழந் தையைப் பெருமிதத்துடன் காட்டிக்கொண்டு, "இந்தப் புள்ள பிரசவத்தின்போதுதான் அந்தப் பிரச்னை ஏற்பட்டது. அன்னியிலிருந்து குழந்தைக்கும், எனக்கும் எந்தக் குறைவும் இல்லை. அம்மனுக்கு அதற்காக அபிஷேகம் செய்துட்டுப் போகத்தான் கோவிலுக்கு வந்திருக்கிறேன்!" என்று பூரிப் புடன் கூறினுர் திருமதி சேதுலட்சுமி.

வாதநோயினுல் பாதிக்கப்பட்ட திரு. இராமநாத ஐயர் என்ற பெரியவர் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் லோகநாயகியின் பேரருளை நினைந்துருகி அன்னையின் சன்னதியைத் தேடி, "தாயே! எனக்கு நீயே அடைக்கலம்" என்று பிரார்த்தனை செய்து வழிபட்டார். அவர் வாழ்விலும் அந்த அற்புதம் நிகழ்ந்தது...

மருத்துவர்களால் கைவிடப்பட்ட அவரை மாதா காத்தருளினுள்.

சர்வேஸ்வரன் நஞ்சை தன் கண்டத்தில் அடக்கி 'நீலகண்டனுகி' இந்த உலகத்தை ரட்சித்தான். ஆனுல், மயிலையில் எழுந்தருளியிருக்கும் லோக தயாபரியான முண்டகக்கண்ணி அம்மனே தம் பிள்ளைகளாய் சர்வலோக ஜீவராசிகளையும் காத்தருள, அவர் தம் பிணி அகற்றகருணைத்திருவுருவோடு அவர்களுக்கு வேண்டிய மருந்தையும், அமுதையுமே தன்னில் கொண்டு அதையே ஓர் அலங்காரமாய்ப் பெற்று அருட்கோலம் கொண்டிருக்கிருள்,

ஆம்; சர்வசதா காலமும் தாமரை (முண்டகம்) நீரின் மத்தியில் இருப்பதுபோல் ஜீவராசியின் இதயத் தாமரையில் வீற்றிருக்கும் முண்டகக்கண்ணி அம்மனின் மூலவரோ, சதா குளிர்ச்சி மிக்க நீரின் மத்தியிலேயே இருக்கை கொண்டிருக்கிறது. அதுதான் மக்களின் பிணி தீர்க்கும் தீர்த்தம்.

அன்னை மக்களுக்கு வழங்கும் அற்புத மருந்து வேப்பிலை. வேப்பிலைக்குள்ளிருந்தே இவ்வியனுலகை ரட்சிக்கும் வேத வல்லி. அவள், அந்த வேப்பிலைதான் இத்தலத்தின் அம்மனுடைய முதல் அலங்காரப் பொருள்.

ஆம்; இத்தலத்தில் பூஜைக்கு நேரம் கால நிர்ணயம் இல்லை காலசந்தி என்ருே, உச்சிக்காலம் என்ருே, அர்த்த ஜாமம் என்ருே கால நிர்ணயம் இல்லை.

ஏழைக்கு இரங்கும் இதயம் உள்ள மருத்துவரைப்போல பக்தி செய்யவரும் எளியோருமாகிய நாம் அவளை பூஜிக்க ஒவ்வொரு விஞடியும் அவள் தன் சன்னதி மலர்ந்திருக்க நமக்காகக் காத்திருக்கிருள்.

''அம்பிகைக்கு நாள்தோறும் காலை 6 மணி முதல் பால், தயிர், பஞ்சாமிருதம், தேன், இளநீர்போன்றவற்ருல் நிகழும் ஆலய அபிஷேகக் கட்டளை அல்லாது, பக்தர்களால் பிரார்த்தனையாக நடுப்பகல் ஒருமணிவரை தொடர்ந்து அபி

ஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. அபிஷேகம் முடிந்தகும் அம்பிக்கைக்கு அலங்காரம் தொடங்குகிறது. அன்னை தரித்துக் கொள்ளும் முதல் ஆடையே வேப்பிலையால் தொடுக்கப்பட்ட பாவாடைதான். அதன்மேல்தான் மற்ற புஷ்ப பூஷணுதி அலங்காரங்கள்'' என்கிருர் நிர்வாக அதிகாரி.

நாம் மனம் கிளர்ந்து அன்னையின் அருள்முகத்தை நோக்கி நிற்கிருேம். மக்களைக் காக்க, தான் அளிக்கும் மாமருந்தான வேப்பிலையையே அன்னைதன் முதல் அலங் காரமாக ஏற்றுக்கொண்டிருக்கிருள் என்ருல் அதற்கு என்ன பொருள்? தேவதேவி அந்தத் திருத்தலத்தில் அருளாய் அமர திருவுள்ளம் கொண்டதே மாந்தர் தம் பிறவிப்பிணிகளையும் பெரும்பாவச் சுமைகளையும் அகற்றி அவர்களை ஆட் கொள்ளுவதற்குத்தானே!

''இத்தலத்தில் அம்பாளுக்கும் நமக்கும உள்ள உறவு, ஒரே குடும்பத்தில் அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இருக்கிற மாதிரி, சிலநேரம் அவ விளையாட்டா கேள்வி கேட்கறதை யெல்லாம் நினைச்சா'' என்று புன்னகையோடு ஓர் அற்புத மான செய்தியைக் கூறுகிருர்கள் திருமதி லட்சுமி கணபதி யும், ராதாபாயும்.

3

மண் பிறக்குமுன் பிறந்த வழக்காடும் வல்லவளே!
யுகம் பிறக்குமுன் பிறந்த உத்தரண்ட பத்ரகாளி
காய்ந்த மழுவேந்தும் கர்த்தருடை தேவியரே!
எரிந்த கழுவேந்தும் ஈஸ்வரனுர் தேவியரே!
எல்லைக்குடையவளே - எம் தாயே மாரியம்மா!
எழுந்திரும்மா ஏகவல்லி - ஏழை நாம் ஏங்குகிருேம்!

அம்மானைப் பாடல்

அன்னம்—உணவு. சாமான்ய மாந்தரின் உடல் தேவை. இது லௌகீகம்.

அருள்—அவர்தம் ஆத்ம தேவை.

இவை இரண்டும் இணையுமா...?

இணைந்தால் அது முறையற்ற இணைப்பு என்று சொல்வார் உண்டு. ஆனால், இவை இரண்டும் இணைந்தால்தான் தெய்வீகம் என்று நம் ஆன்றோர் ஏற்படுத்திக் கடைப்பிடித்து வரும் சமயநெறி.

ஆலயத்தையும்—அன்னத்தையும் நெடுங்காலமாக இணைத்தே வைத்திருக்கின்றனர் நம் முன்னோர். ஒவ்வோர் ஆலயத்திலும் மடப்பள்ளி உண்டு. அன்ன நைவேத்தியம் என்பது ஆலய மரபுகளில் முக்கியமானது.

'இது சுயநல நோக்கமுடையது. ஆண்டவன் பெயரால் சிலரைப் போஷிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட முறை' என்று கேலி செய்வாரும் உண்டு.

'தெய்வம் சாப்பிடுமா?' என்பது அவர்களுடைய கேலி-கேள்வி.

ஆனால் தெய்வம் உண்பதுண்டு! தான் உண்ணுவதற்கு இந்த நைவேத்தியப் படையல்களைத் தன் பிள்ளைகளிடமிருந்து தெய்வம் எதிர்பார்க்கிறது—இப்படி ஓர் உண்மையை அந்த தேவி முண்டகக்கண்ணி அம்மா ஆலயவாசலில் பெண் மணிகள் கூறியபோது நாம் வியப்புற்று நிற்கிறோம்.

மயிலாப்பூரைச் சேர்ந்த திருமதி லட்சுமி கணபதியும், திருமதி ராதாபாயும் அந்தச் செய்திகளைக் கூறினார்கள். அவர்கள் வருடாவருடம் முண்டகக் கண்ணி அம்மனுக்குப் பொங்கல் நைவேத்தியம் செய்வது வழக்கமாம். எப்போதாவது ஒருமுறை குடும்ப சம்பந்தமான சூழ்நிலை காரணமாக பொங்கலிடத் தவறிவிட்டால், மறு வாரமே அன்னை முண்டகக்கண்ணி தேவி அவர்கள் கனவில் வந்து நினைவு படுத்துவாளாம்.

''ஒருமுறை நான் பொங்கலிட மறந்துவிட்டபோது, உடனே என் கனவில் வெள்ளை ஆடை தரித்த பெருமாட்டியாக அம்பாள் தோன்றி, 'எனக்கு பசிக்கிறது. சாதம் போடலையா?' என்று கேட்டாள். உடனே பொங்கல் வைத்து விட்டேன்'' என்றார் திருமதி ராதாபாய்.

திருமதி மீனா சந்திரசேகருக்கு இதே மாதிரி அனுபவம் ஏற்பட்டதாம். ஆனால் கொஞ்சம் வித்தியாசமாக அதாவது திருமதி ராதாபாயிடம் கேட்டதுபோல் அம்பாள், 'எனக்கு சாதம் போடலையா?' என்று கேட்கவில்லையாம். மாறாக அவர் கனவில் வந்து, ஒரு தாய் மகளுக்கு சாதம் பரிமாறுவது போல் அவருக்குச் சாதம் பரிமாறிவிட்டு சென்றாளாம் அம்பாள். அதற்குப் பின்தான் அம்பாளுக்குப் பொங்கலிட தான் மறந்ததை நினைவு கூர்ந்து திருமதி மீனா சந்திரசேகர் பொங்கல் இட்டாராம்.

—இந்த இரு செய்திகளையும் இணைத்துப் பார்த்தபோது என் உள்ளத்தில் இந்த பொங்கலிடும் தத்துவமே புலனாவது போலிருந்தது.

ஒருவரிடம் அம்பாள் வந்து 'சாதம் போடவில்லையா?' என்று கேட்கிறாள், இன்னொருவரிடம் சாதம் போட்டுக் காட்டுகிறாள். இவை இரண்டையும் இணைத்துப் பார்க்கும் போது நமக்குப் 'புலப்படுவது, அம்பாள் சாதம் கேட்பதே நமக்குப் போடுவதற்காகத்தான்...

ஆம்; நம்மை உண்ண வைப்பதே அவளுக்கு உணவு!

அனாதிகாலமாக அருட் தலங்களில் அன்னம் சமைக்கப் படுவதும், பரிமாறப் படுவதும் நாம் சாப்பிட்டு அன்னையை திருப்தி படுத்துவதற்காகத்தான்.

எவ்வொருவர் இல்லத்திலும் உணவு பொங்கலிடப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாகவே தெய்வ ஆலயங்களில் அன்னம் நைவேத்தியமாகிறது; பக்தர்கள் பொங்கலிடுகின்றனர்.

வெள்ளி, செவ்வாய், ஞாயிறு கிழமைகளில் அன்னை முண்டகக்கண்ணி அம்பாள் ஆலயத்தின் பிராகாரங்களில் எல்லாம் பொங்கல் மணம் பூரித்துப் பரவுகிறது. நேமிசமாக பிரார்த்தித்துக் கொள்வாரும், பொங்கலிடுவதை வருடாந்திர நியமமாகக் கொள்வாரும், தம் குழந்தைகளுக்கு முடி காணிக்கைச் செலுத்தும்போது ஒரு தெய்விகக் கடமையாகக் கொண்டோருமாக—பிராகாரம் எங்கும் பொங்கலிட்டு அன்னைக்குப் படைத்து உய்வு பெறுகின்றனர்.

ஃ ஃ ஃ

"சக்திதேவியின் பூரண வல்லமை மிகவும் சக்திவல்லமையுடன் வெளிப்படும் தலங்களில் முண்டகக்கண்ணி அம்மன் தலமும் ஒன்று" என்றார் அப்பகுதியில் வாழும் ஒரு முதுபெரும் சமயப் பெரியார்.

"எதைக் கொண்டு அப்படிக் கூறுகிறீர்கள்?" என்று ஆர்வத்தோடு வினவுகிறோம்.

அதற்கு அவர் கூறிய விளக்கம்:

"சிறப்பான சக்தித் தலங்களில் எல்லாம் நாக தேவதையின் வெளிப்பாடு துல்லியமாக இருக்கும். புற்று வழிபாடும் தத்ரூபமாக இருக்கும். ஏனென்றால், மகாசக்தியே தன்னுடைய பெருமையை நாக சக்தியோடு இணைத்து நமக்கு வெளிப்படுத்துவதாக தத்துவங்கள் கூறுகின்றன! நம் உடம்பில் உள்ள 'குண்டலினி சக்தி'யாக அமைந்திருப்பவள் அன்னையான தேவதேவி. அச்சக்தி நாகசக்தியோடு ஒப்புமை கொண்டது. அதனால்தான் தேவியோடு நாக சக்தியும் இணைந்திருக்கிறது. புற்று வழிபாடும் அந்த தத்துவம்தான். அதன்படி இத்தலத்தில் தினமும் நாகம் அம்பாளுக்குப் பூஜை செய்வதாக ஒரு ஐதீகம். அந்த ஐதீகம் உண்மையாகதினந்தோறும் நடைபெற்று வருவதைப் பலர் கண்கூடாகக் கண்டிருக்கிறார்கள்" என்றார் அவர்.

பொதுவாக கிராம தேவதைக்கு ஆலயங்களில் புற்று வழிபாடு செய்யும்போது, நாகம் புற்றில் வெளிப்படுவதில்லை. மிக அபூர்வமாகத்தான் தென்படும். ஆனால் இத் தலத்தில் புற்று வழிபாடு செய்த பக்தர்களுக்கு நாகம் பல முறை காட்சி அளித்திருக்கிறதாம்.

சென்னை, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த சாரதாம்பாள் என்ற அம்மையார் அத்தலத்தில் புற்று வழிபாடு செய்து கொண்டிருக்கும்போது இந்த அதிசயம் நடந்திருக்கிறது. பாலை ஊற்றி புஷ்ப அஞ்சலி செய்து அவர் பிரார்த்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று நாகம் புற்றிலிருந்து வெளிப்பட்டு அவர் முன் படமெடுத்து நின்றதாம். அந்த அம்மையார் அதைத்தொழுது வணங்கி மெய்சிலிர்த்து நின்றாராம். சில நிமிடங்கள் அவர் கண்முன்னே படமெடுத்த நிலையிலேயே நின்று, அவருக்கு ஆசி வழங்குவது போல் நாகம் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாம்.

இரவு ஒன்பது மணிக்குமேல் ஆலயம் சாத்தப்பட்டபின் நாகம் அம்பாளுக்குப் பூஜை செய்யும் வியப்பான திருக்காட்சியும் இத்தலத்தில் கண்கூடாக நடந்திருக்கிறது!

4

எட்டாத பூமலரை மாரிக்கு
ஏணி வைத்துப் பூவெடுத்தார்
பத்தாத பூமலரைப்
பரண் வைத்துப் பூவெடுத்தார்
அழகு சுளகு எடுங்கள்—மாரிக்கு
அமுது படிதான் எடுங்கள்
உப்பாம் புளி மிளகாம்—ஆயிரம் கண்ணுளுக்கு
உவந்தளிப்போம்—வாருங்கடி!
பெற்றவளைப் அவள் நின்று
பேணிடுவாள் நம் குலத்தை...

—மாரியம்மன் நாடோடிப் பாடல்

நாக பூஜை—நம் இதிகாசங்களிலும் சரி, தொன்று தொட்டு வரும் சமயநெறி மரபுகளிலும் சரி, மிகச் சிறப்பாக இடம் பெற்றிருக்கும் ஓர் அம்சம்.

நாகத்தைக் கண்டால் மக்கள் ஒதுங்குவர், அஞ்சி நடுங்குவர். ஆனால், அதே நாகத்தை வழிபட ஆலயத்திற்கு அமுதோடு வருகிறார்கள்.

தெருவிலோ, ஊர்ப்புறத்திலோ பாம்புப் புற்றோ அல்லது நாகத்தின் உரித்தச் சட்டையோ தென்பட்டால், அந்தப் பகுதியில் நடமாடவே அஞ்சுவர். ஆனால், ஆலயத்தின் நடுவே அமைந்திருக்கும் பாம்புப் புற்றை குழந்தைகள் முதல், பெரியவர்கள் வரை போற்றி வணங்குவர்!

இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்ன...?

எல்லாம் இருக்கும் இடத்தின் விசேஷம்! ஆலயத்தில் அம்பாளாய் அம்பாளின் அம்சமாகப் போற்றப்படுகிறது நாகம்.

கைலாய நாதரான சர்வேஸ்வரனின் முடியில் இருக்கும் நாகமே அம்பாளின் அம்சம்தான் என்பர். இதை மெய்ப்பிப்பது போல் நாகத்தின் தோற்றத்தைக் கனவில் கண்டு நற்பலனை அடைவது மக்களின் அனுபவம்.

இத்தலத்தில் அம்பாளை நாக வடிவில் தரிசித்ததாக ஆலயத்தில் 'நான் சந்தித்த பல மூதாட்டிகள் வெளியிட்டனர்.

"இந்த முண்டகக்கண்ணி அம்பாளின் சக்தி அபூர்வமானது. அவள் வாசம் செய்யும் இடமோ குளிர்ச்சி நிறைந்தது. தாமரை மலரிலே வாசம் செய்து, தாமரைக் கண்ணையே தன் விழியாகக் கொண்டு, எங்கும் குளிர்ச்சியான அருளைப் பொழிந்து கொண்டிருக்கும் அமுதமயமான தேவி அவள். அவளுடைய அம்சத்தில் ஒன்றான நாகமே ஒவ்வொரு தினமும் அவளை வழிபட்டு வருவது இந்தத் தலத்தில் பலர்

கண்டறிந்த உண்மை...'' என்ருர்கள் பூபதி சுவாமிகளும், ஆலய வழிபாட்டிற்குத் தன் முதிய வயதிலும் வந்திருந்த ஸ்ரீ.எஸ்.வி. ராமசேஷன் அவர்களும். (மந்தவெளி)

திரு. பூபதி சுவாமிகள் முண்டகக்கண்ணி ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள விஞயகர் சன்னதியிலேயே தங்கியிருப்பவர். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அங்கேயே தங்கியிருக்கிருராம். ஒரு நாள் இரவு ஒன்பது மணி இருக்கும். அம்பாள் சன்னதியும் நடை சாத்தப்பட்ட பின், பூபதி சுவாமிகள் ஒரு படிக்கடியில் தலையை வைத்து விஞயகர் சன்னதியை ஒட்டி படுத்திருந்தாராம்.

அச்சமயம் 'உஸ்...' என்ற ஓர் ஒலி எழுந்ததாம். அரைத் தூக்க மயக்க நிலையில் இருந்த சுவாமிகள் அப்படியே படுத்திருந்தாராம். சில விஞடிகளில் குளிர்ச்சியாக ஓர் உருவம் தன் மீது இறங்கி மேலே ஊர்ந்து செல்வதை கவனித்துக் கண் விழித்துப் பார்த்தபராம். பளபளப்பான ஒளியுடன் நல்ல முற்றிய நாகம் ஒன்று அவர்மீது ஏறி சிரசிலிருந்து கால் வரை ஊர்ந்து சென்றதாம். அவர் விழித்தபடியே நாகம் எங்கே செல்கிறது என்று கவனித்துக் கொண்டிருந்தாராம். நாகம் அவரைக் கடந்து அம்பாள் ஆலயத்தின் பிரகாரத்தை வலம் வந்து அம்பாளின் கருவறைக்குள் புகுந்துவிட்டதாம்.

ஓலைக்குடிலான அம்பாளின் கருவறைக்குள் அது செல்வதற்கு நல்ல வழி வசதியாக இருந்தது. பின் சுமார் ஒரு நாழிகைப் பொழுது கடந்ததும் மீண்டும் அந்த நாகம் கருவறையிலிருந்து வெளிப்பட்டு வந்ததை அவர் பார்த்தாராம்.

—இதேபோல் பல அன்பர்கள் நாகம் கருவறைக்குள் பிரவேசிப்பதை கண்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

''நாக பூஜை இவ்வளவு தத்ரூபமாக நடக்கும் ஆலயத்தில் அம்மனின் அருளும் மிகவும் துடிப்பாகவும், உக்கிரமாகவும் வெளிப்படுகின்றது என்பது ஐதீகம். அது இந்தத் தலத்

தில் கண்கூடாக நடந்திருக்கிறது...'' என்ருர் மயிலாப்பூரைச் சேர்ந்த கைலாச முதலியார்.

''இரவு நேரங்களில் ஆலயம் திருக் காப்பிட்ட பிறகு கர்ப்பக்கிருகத்துக்குப் பின்புறமுள்ள புற்றிலிருந்து நாகம் வந்து பூஜை செய்து முண்டகக்கண்ணி அம்பாளை வழிபட்டு வருவது உண்மைத்தான்'' என்ருர் ஆலய நிர்வாக அதிகாரியான திரு. கணேசனும்.

''அதனால்தான் இத் தலத்திற்கு நாகதோஷம் உள்ளவர்களும், புத்திரதோஷம் உள்ளவர்களும் பெருமளவில் வருகிருர்கள். இங்குள்ள புற்றில் உள்ள நாகத்துக்கு பால், முட்டை போன்றவற்றை அர்ப்பணித்து தோஷ நிவர்த்திக்காக வழிபடுவது இத்தலத்தில் மிக முக்கியமான பிரார்த்தனைகளில் ஒன்று. அப்படி வழிபட்ட எண்ணற்ற பக்தர்கள் தமக்கு தோஷ பரிகாரமும், கஷ்ட நிவாரணமும் ஏற்பட்டதாக ஆலயத்துக்கு நேரில் வந்தும், கடிதம் மூலமும் தெரிவித்திருக்கிருர்கள்...'' என்ருர் அவர்.

உள்நாட்டில் மட்டுமல்லாது, வெளி நாட்டிலிருந்தும் தொடர்ந்து காணிக்கை செலுத்தும் பக்தர்கள் இந்த அம்பாளுக்கு நிறைய இருக்கிருர்களாம்.

''தென் ஆப்பிரிக்கா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து ஆண்டுக்கு ஒருமுறை தவருமல் வந்து அம்பாளை வழிபட்டுச் செல்லும் பக்தர்கள் நிறைய உண்டு'' என்று கூறிய நிர்வாக அதிகாரி, தம் கூற்றை நிரூபிப்பது போல் பல வெளிநாட்டு பக்தர்கள் ஆலயத்திற்கு எழுதிய கடிதங்களைக் காட்டினர்.

சென்னை நகரிலேயே மிகப்பெருமை வாய்ந்த, ஆலயங்களில் ஒன்ருன இந்த ஆலயம் மிகச் சமீபத்திலேயே வளர்ச்சி பெற்று திருப்பணி செய்யப்பட்டதாம்.

திருப்பணியின் போது ஆலயத்திற்கு ராஜகோபுரம், மஹாமண்டபம் போன்ற பல புதிய அமைப்புகள் உரு,

வாக்கப் பட்டிருந்தாலும்—அம்பாள் அமர்ந்திருக்கும் கரு வறை மாத்திரம் ;தென்னங்கீற்றால் கூரை வேயப்பட்டு ஒரு குடிலாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன......?

''அதுக்கு நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம். ஒரு முறை ரொம்ப தீவிரமா கருவறைக்கு கல் கட்டடம் எழுப்பணும் என்று எங்க முன்னோர்கள் முயற்சி செய்த போது, அம்பாளே அருள்வாக்கில் வந்து, 'நான் குடிசையில் தான் இருப்பேன்...அதை மாத்த நீங்க யாரும் முயற்சி பண்ணினா அதுக்கு நான் விடமாட்டேன்' என்று சொல் லிட்டா. அப்படியும் கட்டடம் கட்டலாம்னு பிற்காலத்தில் சிலர் ஆசைப்பட்டாங்க. அவங்களுக்கு அறிகுறியா சில கஷ்டங்களைக் கொடுத்து, அந்த முயற்சியை நிறுத்திட்டா அம்மா அவ எதுக்கு குடிசையில்தான் இருப்பேன்னு சொல் றான்னு யாருக்குமே புரியல...'' என்கிறார் ஆலயத்தில் பூஜா உரிமை பெற்றிருக்கும் திரு. சுந்தரமூர்த்தி.

அருள்ஜோதியாய் திருவொளி வீசி நிற்கும் அன்னையின் அற்புதத் திருஉருவை சேவித்து நிற்கிறோம். அந்தத் தோற் றத்தில் எத்தனை எத்தனையோ மெய்விளக்கங்கள், தத்துவங் கள் வெளிப்பட்டு வந்து நம்மை ஆகர்ஷிக்கின்றன...

5

தங்கச் சரவிளக்காம் எங்கள் மாரிக்கு
தனித்திருக்கும் மண்டபமாம்!
எண்ணெய்க் கிணறுகளாம் எங்கள் மாரிக்கு
எதிர்க்கக கொடிமரமாம்!
தண்ணீர்க் கிணறுகளாம் எங்கள் மாரிக்கு
தவசிருக்கும் மண்டபமாம்
வேப்பிலைக் குள்ளிருக்கும் எங்கள்
வேதவல்லி நாயகியே!

தொழுதகரம் காப்பாய் எங்கள்
தூமணியே மகமாயி!

—நாடோடிப் பாடல்

சென்னையிலேயே ஒரு சிங்காரப்பகுதி மயிலாப்பூர். அங்கே மாட மாளிகைகளுக்கும், மாண்பு பெற்ற கட்டடங்களுக்கும் பஞ்சமில்லை,

மனிதர்கள் வாழ மனிதர்கள் பணிபுரிய அத்துணை மகத்தான கட்டடங்களை அமைத்துக் கொண்டிருக்கும், எம் மாதாவோ தான் நின்று அருள் புரிய தேர்ந்தெடுத்திருக்கும் கருவறை ஓர் ஓலைக்குடில் என்றால், அம்பாளின் அருள் சித்தம் என்ன.......

பேசாமல் பேசி தன் விழியாலேயே உலகாளும் அம்பாள் "முண்டகக்கண்ணி அம்மனின் திருவுளச் சித்தத்துக்கு வேறு என்ன விளக்கம் வேண்டும்?

ஏழையற்கு எளிமையாம் இல்லார்க்கு எல்லாமாய், தம் மக்கள் எட்டுகின்ற எல்லைக்குள் அவர்களுள் நானும் ஒருத்தியாய் அமர்ந்து அருள்புரியவே அவள் அந்த எளிய தவக் கோலம் பூண்டு அருள் புரிகிறாளோ......?

அத் தலத்திற்குத் தாய்வீட்டுச் சரளத்துடன் அனவரதமும் கும்பல் கும்பலாகக் குடும்பம் குடும்பமாக வந்து தொழுது நிற்கும் பக்தர்கள் கூட்டத்தில் அவர்கள் முகங்களில் ஒளி வீசிடும் நம்பிக்கைச் சுடரில் அன்னையின் எளிமைக் கோலத்திற்கு விளக்கம் சுடர் விடுகிறது.

''குழந்தையில்லாமல் இருந்த எம் மகள் சாந்திக்கு குழந்தை செல்வத்தைக் கொடுத்து அவள் வாழ்க்கையில் ஒளி ஏத்தி வச்ச மகராஜி இந்த அம்மா...'' என்று கண் கலங்கக் கூறும் திரு. குப்புசாமி போல் எத்தனை பேர்!

''எழுந்து நடமாடக்கூட முடியாமல் பக்கவாதத்தில் வீட்டோட கிடந்தேன். வேப்பிலை பாவாடைக் கட்டிய

இந்த ஆத்தா போட்ட பிச்சையில் இன்னிக்கு என் உடம்புக்கு எந்தக் குறையும் இல்லை. இந்த எழுபது வயசிலேயும் உடலில் ஒரு கோளாறும் இல்லாம நடமாடிக்கிட்டு இருக்கேன்...'' என்று கைதொழும் திரு. பக்கிரிசாமிப் பிள்ளையை போல் எத்தனை பேர்!

அம்மைப் போட்டிய சோதனைக்கு அன்னையிடம் நிவாரணம் பெற்ற பூரிப்பில் அவள் பிரகாரத்தில் பொங்கலிட்டு, மகிழும் குழந்தை அம்மாள் போல் எத்தனை பேர்!

பட்டினப்பாக்கம் திரு. என். சுப்பிரமணியன், அன்னையின் அருளால் தன் வாழ்வு வளமானதைப் பற்றி மெய்யுருக கூறுகிறார்.

இப்படி மண்ணில் தோன்றிய எண்ணற்றப் பிணிகளுக்கும், நீங்கா குறைகளுக்கும் மருந்தாய் நிற்கும் அந்த லோக மாதாவின் அருள்பூத்த சன்னதியில் ஒளிவேண்டி நிற்கும் மக்கள் எல்லாரும் எளியவர்கள் எளியவர்கள்...! பொருளில் எளியவர்கள்—நலன்களில் எளியவர்கள்—வாழ்வின் பற்றுப் பாச மற்ற நம்பிக்கையின்மையால் எளியவர்கள்! இந்த எளியவர்களுக்காக அம்பாள் முண்டகக்கண்ணி அம்மன் அப்படி ஓர் எளிமைத் தவம் மேற்கொண்டிருக்கிறாள்.

அன்னையின் அருட் பெருமையை மனத்துள் எண்ணி மெய்மறந்திருக்கிறேன்.

அச்சமயம் மயிலாப்பூரைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. வி. ஆர். வெங்கட்ராமன், ''இந்தத் தேவியின் மகிமையைப்பற்றி வாய்விட்டுக் கூறும் திறன் யாருக்கும் இல்லை. அதை அனுபவித்தவர்கள் மட்டுமே உணர முடியும். இந்த அம்பாளைத் தரிசிக்க அடிக்கடி நானும் என் மனைவியும் வருவோம். மனிதனுக்கு உள்ள பிணிகளில் எல்லாம் மிகக் கொடியது மனப்பிணி. மனஅமைதி கிட்டாமல் அவன் அவதிப்படுவதே பெரும் சோதனை. அதனை நீக்கும் வல்லமை பெற்றவள் இந்த முண்டகக்கண்ணி அம்பாள். அவளை

நினைத்துப் பிரார்த்தித்துக் கொண்டால் போதும்! மனதில் எந்த வேதனை இருந்தாலும் உடனே மாறிவிடும். அப்படி ஓர் அபூர்வக் கருணை உள்ளவள் இந்தத் தேவி!'' என்று பக்திப் பரவசத்துடன் கூறுகிறார்.

உணர்வுகள் சிலிர்க்க அருள் மயமாய் ஒளிரும் தேவ தேவியை நோக்குகிறேன்.

அம்மா, மாந்தர்தம் இதயத் தாமரையில் வந்து அருளாய் மணம் வீசுவதால் தானோ. இப்புவி மாந்தர் உன் அருள் விழிகளைத் தாமரைக்கு ஒப்பிட்டு 'முண்டகக்கண்ணி அம்மன்' என்று போற்றுகின்றனர்......?

அதோ, மொய்மலர் வண்டுகள்போல் அன்னை முண்டக கண்ணி தேவியின் சன்னதியை நோக்கிப் பக்திப் பெருங் கூட்டம் பரவசம் பொங்கும் சுடர் முகங்களுடன் திரண்டு நிற்கிறது, பாவையர், பாமரர், ஏழையர், செல்வர், சிறுவர், முதியோர் இப்படி எத்தனை எத்தனையோ பேர்!

அங்கப் பிரதட்சணம் செய்வோரும், அடிப்பிரத தட்சணம் செய்வோரும், அர்ச்சனை-அபிஷேகம் செய்வோரும் கண் மலர் காணிக்கை செலுத்துவோரும், அன்னைக்குப் பாவாடை சாத்தி மகிழ்வோரும், கோழி சுற்றி விட்டு பொங்கலிடுவோரும் தம் பிள்ளைகளுக்கு அவள் சன்னதியில் காதுகுத்தி மாவிளக்கு நைவேத்தியம் செலுத்துவோரும்-இவர்களன்றி வெறும் கண்ணீரால் மட்டுமே அன்னையின் பொற்கழலுக்கு அபிஷேகம் செய்து கசிந்துருகி பூஜிப்போருமாய்...உள்ளத்தை நெகிழ்விக்கும் என்னவொரு திருக்காட்சியம்மா நின் சந்நிதியில்!

அங்கே பூச்சரங்களாய் குத்துவிளக்குகள் எரிய, குண திசை (கிழக்கு நோக்கி தன் கோலத் திருமுகம் சுடர்விட 'ஓம்' கார நாயகியாம் நம் தேவதேவி ஓலைக் கொட்டகை யிலமர்ந்து உலகாள்கிறாள்!

அகன்றும் கூர்மையாகவும் அருள் வழங்குவதற்கு அடை யாளமாய்த் திகழும் சூலத்தையே தன் முக வடிவாக்கி

சுந்தரஜோதி வடிவாய் திருக்காட்சி தந்து ஒளிர்கிருள் லோக நாயகியான முண்டகக்கண்ணி அம்பாள்.

அவள் தரிசனம் கண்டு உய்வுற்ற பெருமிதத்தில் அந்த உலகநாயகியை உள்ளத்தில் பரவச பரமானந்த எழுச்சி பொங்க போற்றித் தொழுகிறோம்.

தேவி! நீ ஒரு கரத்தில் சூலம் ஏந்திஞலே, ஒரு கோடி பாவம் அழிந்து இந்த உலகம் உய்யுமே!

அப்படியிருக்க உன் திருவுருவமே சூலமாக இத் தலத்தில் அமர்ந்து அருள் வழங்க வந்தது என்ன...? நின் அடியார்கள் செய்திட்ட பெருந்தவமோ! அன்றி, நீ கருணையுட் கொண்டிட்ட திருவுளமோ?

அம்மா! வழிகாட்டி அதில் அருள்கூட்ட வந்திட்ட ஞானப்பெருங்கடலே! வெய்ந்துயரால் வெந்திட்ட வியனுலகை வேப்பிலையால் காத்தருளும் எம் வேதமுதல்வி! நீ விழியாலே மலராஞய்! அந்த மலரெல்லாம் அருளாகும்! அந்த அருளெல்லாம் எம் வாழ்வாகும்!

வையமும் வானும் தேடித்திரிந்தலைந்து நாடி உனைப் பற்றி நம்பித் தொழுதிட்டோம். நாயகியே! ஞானப் பெருமாட்டி! வண்மைசேர் கற்பகமே! கருணைத்திரு மாமணியே! வாடாத அருள் தந்து வாழ்விப்பாய் நின் பிள்ளைகளை! தொழுதிட்டோம்.........தொழுதிட்டோம். தூமணியே நின்பதம் போற்றி!

கடன் நீங்க—கவலைதீர—செல்வம் பொங்க துர்க்கா ஸ்தோத்திரம்

(மகாபாரதம் விராட பர்வதம் 8-வது அத்தியாயத்திலுள்ள தர்மபுத்திரர் செய்த துர்க்கா ஸ்தோத்திரம்.)

கடன் நீங்க, வியாதி குணமடைய, செல்வம் பெருக, மனக்கவலை ஒழிய, கஷ்ட நிவாரணம் பெற இதன் அர்த்தத்

தைப் படித்தாலும் கூட முண்டகக் கண்ணியாய், கோலவிழி அம்மன் என்னும் பெயரில் வீற்றிருக்கும் பத்திரகாளி அருள் புரிவாள்.)

1. விராட நகரம் ரம்யம் கச்ச மானோ யுதிஷ்டிர-I
அஸ்துவன் மனஸா தேவீம் துர்காம் த்ரிபுவனேஸ்
வரீம்-II

2. யசோதா கர்ப்ப ஸம்பூதாம் நாராயண வரப்ரி
யாம் I
நந்த கோப குலே ஜாதாம் மங்கல்யாம் குலவர்த்
தனீம்II

(மறைந்து வாழ விராட நகரத்தைத் தேர்ந்தெடுத்துச் செல்கின்றேன். மூன்று உலகங்களையும் காக்கும் ஈசுவரியே எனக்குத் துணை நின்று வெற்றி தருவாயாக! குலம் தழைக்கச் செய்பவளே! யசோதையின் கருவில் உதித்தவளே! நாராயணனுக்குப் பிரியமான சோதரியே! மங்களத்தைக் கொடுப்பவளே! நந்த கோபருடைய வீட்டில் பிறந்தவளே!)

3. கம்ஸ வித்ராவண கரீ மஸுராணாம் க்ஷயங்கரீம் I
ஸிலாதடவினி க்ஷிப்தாமாகாஸ்ம் ப்ரதிகாமினீம் II

4. வாஸு தேவஸ்ய பகினீம் திவ்யமால்ய
விபூஷிதாம் I
திவ்யாம் பரதராம் தேவீம் கட்க கேடக
தாரிணீம் II

(கம்ஸனால் கல்லில் அறையப்பட்டதும் விசுவரூபம் எடுத்தவளே! புஷ்பங்களால் அலங்கரிக்கப் பட்டவளே! அழகிய ஆடை அணிந்தவளே! எதிரிகளை விளையாட்டாய் அழிப்பவளே! கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்களைத் தரித்த கண்ணனின் தங்கையே! எனக்கு அருள் செய்வாய்!!

5. பாராவதரணே புண்யேயே ஸ்மரந்தி ஸதா
ஸிவாம் I

தான்வை தாரயதே பாபாத் பங்கே காமிவ
துர்பலாம் I.

(மங்கள ரூபிணியான பத்ரகாளி! உன்னை புண்ணியத்தை வேண்டி நினைத்தாலும் சரி...பாபம் தீர, கஷ்டத்தை இறக்கி வைக்க பூஜித்தாலும் சரி, எவர், எப்பொழுது என்று பேதம் பார்க்காமல் சகதியிலகப்பட்ட மெலிந்த பசுவைக் கரையேற்றுவது போல் துன்பத்திலிருந்து காப்பாற்றுகிறாய்!)

6. ஸ்தோதும் ப்ரசக்ரமே பூயோ விவிதை : ஸ்தோத்ர
ஸம்பவை :I
ஆமன்த்ரிய தர்ஸனு காங்க்ஷி ராஜா தேவீம்
ஸஹானுஜ : II

7. நமோஸ்து வரதே! க்ருஷ்ணே! குமாரி! ப்ரஹ்ம
சாரிணி
பாலார்க்க ஸத்ரு ஸாகாரே! பூர்ணசந்த்ர
நிபானனே!

(எல்லோரும் வாருங்கள்...என்னோடு சேர்ந்து துர்க்கையை ஸ்தோத்திரம் செய்யுங்கள். அவள் பிரத்யட்சமாகி வரம் கொடுக்காமல் விடப்போவதில்லை. அவள் கருணைக் கடல்! வரத்தை அள்ளித் தருபவள்...கருநிறமுடையவள்! குமாரி! வேதத்தில் உறைபவள்...சூரிய ஒளிபோன்ற உருவமுடையவள்.)

8. சதுர்ப்புஜே! சதுர்வக்த்ரே! பீனஸ்ரோணி
பயோதரே
மயூர பிச்சவலயே! கேயூராங்கத தாரிணிII

9. பாஸிதேவி! யதா'பத்மா நாராயண பரிக்ரஹ :I
ஸ்வரூபம் ப்ரஹ்மசர்யம் ச விஸதம் தவகேசரி II

(நான்கு கரங்களை உடையவளே! நான்கு முகங்களை உடையவளே! பருத்திருக்கும் பின்தட்டும், கும்பம் போன்ற ஸ்தனங்களும் அமைந்தவளே! மயில் தோகையின் நிறமுள்ள

வளையல்கள் அணிந்திருப்பவளே! மகாலட்சுமியைப் போல அலங்காரமாயிருக்கும் உன் ரூபம் நிர்மலமானது. வானத்திலிருந்து என்னை கண்காணிப்பவளே! உன் திருவடிகளுக்கு என் நமஸ்காரங்கள்.)

10. க்ருஷ்ணச் சவிஸமா க்ருஷ்ணு ஸங்கர்ஷணஸ
மானனு
பிப்ரதி விபுலௌ பாஹு ஸக்ரத்வஜஸமுச்ச்ரயௌ

11. பாத்ரீ ச பங்கஜீ கண்டீ ஸ்த்ரீ விஸுத்தா சயா
புவி!
பாஸம் தனுர் மஹா சக்ரம் விவிதான்யா
யுதானி ச II

12. குண்டலாப்யாம் ஸுபூர்ணுப்யாம் கர்ணுப்யாம் ச
விபூஷிதா!
சந்த்ர விஸ்பர்த்தினு தேவி! முகேன த்வம்
விராஜஸே II

(நீலமேகம் போன நிறமுடையவளே! பூர்ண சந்திரன் போன்ற பிரகாசமான முகமுடைவளே? அளவும் அழகுமாய் உருண்டையான கரங்களை உடையவளே! பரிசுத்தமான தேவி! காதுகளில் குண்டலம், கரங்களில் தாமரைப்பூ! மணி, பாசம், வில், மகாசக்ரம் இப்படி பல ஆயுதங்களோடு காட்சி தருபவளே! உன் திருவடிகளில் நமஸ்கரிக்கின்றேன்.)

13. முகுடேன விசித்ரேண கேஸ பந்தேன ஸோபினு!
புஜங்கா போக வாஸேன ஸ்ரோணி ஸுத்ரேண
ராஜதா

14. விப் ராஜஸே சாஸபத்தேன போகேனேவேஹ
மந்தா : I
த்வஜேன ஸிகி பிச்சாணு முச்ச்ரிதேனவி ராஜஸே II

(உன் கிரிடம் விசித்திரமானது; அழகிய கொண்டையின் மேல் அது வீற்றிருக்க என்ன புண்ணியம் செய்ததோ? தேவர்கள் அமிர்தம் எடுக்க பாற்கடலைக் கடையும் போது

மந்தர மலையானது வாசுகியால் சுற்றப்பட்டிருந்ததைப் போல எங்கள் கவலைகளால் நீ பிணைக்கப்பட்டிருக்கின்றாய்? உன் கொடியிலுள்ளது மயில் தோகை! நாகம் மயிலைக்கண்டு அஞ்சுவது போல் எங்கள் துன்பங்கள் உன் வரவு கண்டு ஒடி விடாதோ)

15. கௌமாரம் வ்ரத மாஸ்தாய த்ரிதிவம் பாவிதம் த்வயா!
தேனத்வம் ஸ்தூயஸே தேவி! த்ரிதஸை :பூஜ்ய ஸேபிச II

16. த்ரை லோக்கிய ரக்ஷணார்த்தாய மஹிஷாஸுர நாஸினிI
ப்ரசன்னமே ஸுர ஸ்ரேஷ்டே! தயாம் குரு ஸிவா பவII

17. ஜயா த்வம் விஜயா சைவ ஸங்க்ராமே சஜயப்ரதா
மமாபி விஜயம் தேஹி வரதா த்வம்ச ஸாம்ப் ரதம் II

(தேவி, நீ இருப்பதால் கைலாசம் பரிசுத்தமடைகின்றது உன்னை தேவர்கள் எப்போதும் ஸ்துதிக்கிறார்கள்;பூஜிக்கிறார் கள்.

அடியேனுக்கு மங்களத்தைக் கொடுக்க, கடைக்கண் காட்டம்மா! அன்று உலக க்ஷேமத்திற்காக மஹிஷா சுரனை வதைத்தவளே! உடனே காட்சி கொடு,

உன் விஜம் ஜெயத்தைக்கொடுப்பதால் எனக்கு என்றும் பக்க பலமாய் இரு. வரப்பிரியே! நான் நன்மையை அடைய வரங்களைத் தா!)

18. விந்த்யே சைவ நகஸ்ரேஷ்டே தவஸ்தானம் ஹி ஸாஸ்வதம் I
காளி காளி! மஹா காளி! ஸீது மாம்ஸ பஸு ப்ரியே!
க்ருதானு யாத்ர பூதைஸ்த்வம் வரதா காம சாரிணி II


(காளிதேவி! பத்ரகாளி! விந்திய மலையில் வசிக்க ஆசை யுள்ளவளே! பூதங்களாலும் வணங்கப் பட்டவளே! மானு டர்களின் இஷ்டங்களை பூர்த்தி செய்பவளே! இஷ்டப்படி சஞ்சரிக்கும் போது என்னையும் கொஞ்சம் பார்,)

19. பாராவதாரேயே சத்வாம் ஸம்ஸ்மரிஷ்யந்திமானவா
ப்ரண மந்தி ச யே த்வாம் ஹி ப்ரபாதே து நரா புவி I
ந தோஷாம் துர்லபம் கிஞ்சித் புத்ரதோ தனதோ அபிவா II

(எந்த மனிதன் கஷ்டங்கள் தீர உன்னை நினைக்கிருக்ளு, விடியற்காலையில் எழுந்து நீராடி இந்த ஸ்தோத்திரத்தை ஸ்மரிக்கின்ருனே அவனுக்கு ஸத்புத்திரர்களும், செல்வமும் கிடைப்பது கஷ்டமே இல்லை.

20. துர்காத் தாரயஸே துர்கே! தத்வம் துர்கா ஸ்ம்ருதாளுனை I
காந்தா ரேஷ்வ வஸன்னானும் மக்னானும் சமஹார்ணவே I
தஸ்யு பிர்வா நிருத்தானும் த்வம் கதி: பரமா நிருணும் II

ஹே துர்க்கே! மனிதர்களின் துக்கத்தைப் போக்குவதால் துர்க்கை என பெயர் பெற்றவளே! தர்ம சங்கடத்தில் தவிப்பவர்களையும், கடல் நடுவே அகப்பட்டவர்களையும், கள்ளவர்கள் நடுவே மாட்டிக்கொண்டு விழிப்பவர்களையும் நீ ஸ்மரித்த மாத்திரத்தில் ஓடிச் சென்று காப்பாற்றுகின்ருய்.


மணிவேல்
'80